அகஸ்திஸர்

# புஷ்ப ஆரூடம்

62



கிடைக்குமிடம்

## சரஸ்வதி புத்தகசாலை,


175, செட்டியார் தெரு, கொழும்பு-11,

உ

கடவுள் துணை

# அகஸ்தியர்

# புஷ்ப ஆரூடம்



கிடைக்குமிடம்


## சரஸ்வதி புத்தகசாலை,

175, செட்டியார் தெரு,

கொழும்பு-11.

விலை] [ரூபா 1-25

மெய்கண்டான் அச்சியந்திரசாலை,
161, செட்டியார் தெரு,
கொழும்பு.

## அகஸ்தியர்

# புஷ்பாரூட சக்கரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 60 | 59 | 58 | 57 | 56 | 55 |
| 54 | 53 | 52 | 51 | 50 | 49 |
| 48 | 47 | 46 | 45 | 44 | 43 |
| 42 | 41 | 40 | 39 | 38 | 37 |
| 36 | 35 | 34 | 33 | 32 | 31 |
| 30 | 29 | 28 | 27 | 26 | 25 |
| 24 | 23 | 22 | 21 | 20 | 19 |
| 18 | 17 | 16 | 15 | 14 | 13 |
| 12 | 11 | 10 | 9 | 8 | 7 |
| 6 | 5 | 4 | 3 | 2 | 1 |

# புஷ்பங்களின் பெயர்கள்

1. அல்லிப்பூ
2. அசோகு
3. அவ்வலரி
4. அழவணப்பூ
5. இருவாட்சி
6. எருக்கன் பூ
7. கஸ்தூரிப்பட்டை
8. கதிர்பச்சை
9. கனகாம்பரம்
10. காட்டுரோஜா
11. குண்டுமல்லி
12. குருவேர்
13. கொடிமல்லி
14. கொங்குமல்லி
15. கொடிசம்பங்கி
16. கொன்றைமலர்
17. சப்பாத்திப்பூ
18. சரக்கொன்றை
19. சம்பங்கி
20. சாமந்தி
21. சூரியகாந்தி
22. செவ்வலரி
23. செந்தாமரை
24. செண்பகம்
25. தவனம்
26. தாழம்பூ
27. துலுக்குச்சாமந்தி
28. நந்தியாவட்டை
29. நாகமல்லி
30. நித்தியமல்லி
31. நீலாம்பரம்
32. பத்திராக்ஷிப்பூ
33. பன்னீர்புஷ்பம்
34. பவழமல்லி
35. பட்டுரோஜா
36. பாதிரிமலர்
37. பாரிஜாதம்
38. புன்னைமலர்
39. மல்லிகை
40. மனோரஞ்சிதம்
41. மருவு
42. மரிக்கொழுந்து
43. மயில் கொண்டை
44. மஞ்சள்ரோஜா
45. மரமல்லி
46. மஞ்சாம்பரம்
47. மகிழம்பூ
48. மன்மதபாணம்
49. மந்தாரை
50. முல்லைமலர்
51. வெடிகனகாம்பரம்
52. வனஞ்சாம்பரம்
53. வாடாமல்லி
54. வெண்சாமந்தி
55. வெண்தாமரை
56. வெட்டிவேர்
57. வெள்ளைரோஜா
58. ரோஜாமலர்
59. ஜாதிமல்லி
60. டிசம்பர்புஷ்பம்

ஆருடம் பார்ப்பவர்கள் இதிலுள்ள புஷ்பங்களின் பெயர் ஒன்றையாவது அல்லது புஷ்பங்களின் தலைப்பிலுள்ள 60 நெம்பர்களிலொன்றையாவது நினைத்துக்கொண்டு அந்த புஷ்பத்தின் பெயர் எந்தபக்கத்திலிருக்கின்றதோ அந்த ஆருடத்தை படித்து அதிலுள்ள நன்மை தீமையை தெரிந்து கொள்ளவும்.

# I. அல்லிப்பூ

**ஆருடம் கேட்பவரே!**

நீ உனது வாழ்க்கையிலே நல்லயோகாதிகாரனாகத்தான் விளங்குகிறாய் நீ எந்த இடம் போனாலும் உனது தொழிலின் அநுகூலத்தினாலேயே கவலையென்பதை கனவிலும் கண்டறியாத முறையில் உன் வாழ்க்கை கஷ்டமற்று நிகழ்ந்து வருகிறது தவிர நீ அளவிலாத சந்தோஷமான நிலவரத்திலிருந்தாலும் அந்த கட்டத்திலும் பல இடைஞ்சல்களைக் காணலாம். ஆனால் நீ உனது நல்லயோகத்தின் காரணத்தினால் அதுகளையெல்லாம் பொருட்படுத்தாமல் சமாளித்து வருகிறாய். இருந்தாலும் யாருக்குதான் நீ உபகாரம் செய்தாலும் அதனால் அபகாரம் நேருகிறதே யொழிய நன்மை ஏற்படாமல் நன்றியற்ற முறையைக் கண்டு உன் உள்ளம் நாணமடைகின்றது உனது தொழிலிலும் குடும்ப வாழ்க்கையிலும் சில இடைஞ்சல்களை விளைவிக்க எதிரிகள் கூட்டம் எதிர்பார்க்கின்றது அதற்கெல்லாம் அச்சப்படாதே முன் எச்சரிக்கையாகவே இரு நீ இப்பொழுது ஒருவரின் உதவியை நாடியிருக்கின்றாய் அதற்கு இம்மாதம் போனால் அநுகூலமேற்படலாம் இருந்தாலும் வாரத்திற்கொருநாள் ஏழைகளுக்கு உன்னாலியன்றளவு தர்மஞ் செய்துவா தர்மத்திற்கு தாழ்வு ஏற்படாது மனதில் கோரிய எண்ணம் இன்னும் 9 மணி நேரத்திலோ 9 நாளிலேயோ ஜெயமாகும் கவலைப்படாதே உத்தமம்.

★

# 2. அசோகு

**கிரகராசியை பார்ப்பவரே!**

உனக்கு ஆண்டவனின் சகாயமும் உறவின் முறையாரின் உதவியும் அரிய பெரியோர்களின் ஆதரவும் இருப்பதால் நல்ல அதிர்ஷ்டவசம் பொருந்தி விளங்குவாய் தவிர சிலநாட்களாக உன் குடும்பத்திலேயுள்ள கவலையும் கஷ்டமும் கடூரமான நோயும் துடியான கெண்டங்களும் அடியோடு விலகும் நாள் போக போக அபாரமான செல்வாக்கும் தேக ஆரோக்கியமும் அண்டின பேர்களை ஆதரிக்கும் தன்மையும் ஆழ்ந்து யோசிக்கும் ஒவ்வொரு எண்ணங்களும் அபஜெயமில்லாமையும் புதிய பந்துக்களின் உறவும் புத்திரபாக்கியமும் புண்ணியந் தழைக்க கண்ணியமான தானதர்மத்தின் மேன்மையும் பொல்லாத கவலைகள் விலகவும் காலம் நெருங்கியுள்ளது. ஆனால் இதில் ஒரு குறையுண்டு அதாவது சுமார் ஒரு வருடகாலமாக ஜென்மத்தில் ராகு சம்பந்தப்பட்டு இருக்கின்றான் அந்த ராகு கொடிய வனாதலால் உன்னை பலவழியிலும் கெடுத்திருப்பான் இருந்தாலும் 12 தினத்தில் அந்த ராகு ஒழியப் போகின்றான் அதன் பிறகு எக்காரியத்திலும் உனக்கு ஒரு சிக்கலுமேற்படாது நினைப்பதெல்லாம் உனக்கே ஜெயமுண்டு இப்பொழுது எதிலும் அவசரப்பட்டு பிரவேசிக்காதே பிரவேசித்தால் அபஜெயமே காணப்படும் உத்தமம்.

✸

# 3. அவ்வலரி

இராசிபலனை கேட்பவரே!

கவலைக்கொண்ட உள்ளம் கலங்கி வாடுகிறது கைக்கெட்டிய பொருள் வாய்க்கெட்டாத காரணத்தினால் மனது பலவிதத்திலும் ஏமாற்றமடைகின்றது கருத்தில் உதித்த எண்ணங்களெல்லாம் கத்தரித்துப் போகிறதே என உன் மனது இரவும் பகலும் ஆண்டவனை நினைந்து அலைமோதுகிறது எந்த முறையில் நாம் முன்னேற்ற மடையலாம் எந்த காலத்தில் நமது வாழ்க்கையானது மேன்மையடையும் நாலு பேர்போல நாட்டில் நல்லவிதமாக எப்பொழுது வாழ முடியும் என மனது எதிர்பார்க்கின்றது குடும்ப வாழ்க்கையிலே ஒருவிதத்திலல்ல பலவிதத்திலும் பலபேர்களால் மோசம் போயிருக்கின்றாய் அதனால் இதுவரையில் அளவுகடந்த கஷ்டங்களை யனுபவித்தும் இன்னும் பல மோசக்காரர்களின் உறவைதான் உன் மனது நாடுகிறது உன் மனம் ஒரு நிலையிலில்லாத காரணத்தினால் தான் கல்லடிபட்ட கண்ணாடிபோல் உன் இல்லற வாழ்க்கை நல்வறமற்று விளங்குகிறது அதற்காக கவலைப்படாதே உன்கஷ்டம் துலையவும் கவலை நீங்கவும் மன நோய் மறையவும் அடுத்த மாதம் 7 தேதி போக வேண்டும் அப்பொழுது புதன் தனுர்ராசிக்கு வருகிறான் அதன் பிறகு குடும்பத்திலே புதுமையான நல்ல காரியங்களும் மனக் கோரிக்கையும் தடையில்லாமல் ஜெயமடையும் அவசரப்படாதே மத்திபம்.

✱

# 4. அழவணப்பூ

யோகத்தில் உயர்ந்தவரே!

உனக்கு அதிர்ஷ்டவசமான அம்சங்கள் பொருந்தியுள்ளதால் நல்ல அநுகூலமான தொழில் முறையும் அதில் அளவற்ற ஆதாயங்களும் மனதில் எப்பொழுதும் எவ்விதமான எண்ணங்களை எண்ணினும் அந்த எண்ணம் தடையின்றி ஜெயமடையும் தன்மையும் தவிர உனக்கு சிறு வயது முதற்கொண்டு பலவிதமான நோய்நொடிகளும் கெண்டாதி கெண்டங்களும் பல ஆபத்துக்களும் கர்ட்டிவிலகியிருக்கலாம் ஆனல் இனி உனக்கு ஆயுள் ரேகையின் அமைப்பு நீடித்திருப்பதால் அவ்விதமான கெண்டங்களைக் காட்டவோ நோய் நொடிகள் பாதிக்கவோ ஆயுளையழிக்கவோ அய்யனின் அதிகாரமில்லை தவிர மனையில் நல்காரியங்களும் ஆண்குழந்தை உற்பத்தியும் பொன் பொருள் சேர்க்கையும், குடும்ப ஒற்றுமையுமுண்டாகும், கைவிட்டுப்போன பொருளோ, தொழிலோ ஜீவனே 8 தினத்தில் கிடைக்கும், குடும்பத்திலுள்ள கவலைகள் நீங்கி கண்ணியமான செல்வாக்கும் இன்பமான வாழ்க்கையும் இனத்தவர்களின் உதவிகளும் குடும்பத்திலே அதிக செல்வாக்கும் ஏற்படும் தவிர எண்ணிய எண்ணங்கள் எதுவாயினும் இடைஞ்சலில்லாமல் 1 வாரத்தில் நீ வெற்றிபெறுவாய் அஞ்சாதே உத்தமம்.

✱

# 5. இருவாக்ஷி

கவலைக்கொண்டவரே!

ஆசை அலைமோதுகிறது சில ஆகாதகிரகங்கள் அதை சற்று நடுக்கின்றது ஆனால் உனது அம்ச லக்ஷண ஆதிக்கமான கிரகங்கள் சிலது ஆக்ஷிபீடத்திலே அமர்ந்திருப்பதால் உனது எண்ணங்களெதுவும் அபலமாய்போகாது! ஆத்திரப்படாதே! குடும்பத்தில் உனக்கு மேலான பதவி ஏற்படும் புதிதாக ஒரு ஸ்திரீயின் உதவியினால் பலவித லாபங்களும் உன்னை இதுவரை சிரமித்து வந்த நோய் பருந்தினை நீங்குதலும் எத்தகைய குற்றங்குறையாயினும் நம்பிக்கொள்ளும் மார்க்கமும் இனத்தினர் ஒருவரால் பணவசதிகளும் பொருந்தும் இருந்தாலும் உன் குடும்ப வாழ்க்கையில் மனவேதனையும் விசாரமும் இருந்துக்கொண்டுதானிருக்கும் அதனால் ஒருவித இடைஞ்சலும் ஏற்படாது சமூகநலமான பலவித பழக்க வழக்க தெய்வப்பிரார்த்தனைகளும் உன் மனம்போல் ஈடேறுவதுடன் கடனில்லாமல் கனிப்புடனிருக்கும் தன்மையும் கூட்டுத் தொழிலில் ஆதாயங்களும் புத்திரர்களால் செல்வாக்கும் எக்காரியத்திலும் அபஜெயமில்லாமையும் 14 நாளில் உனது கவலைகள் விலகி நல்ல சுகத்தையளிக்கும் மேன்மையும் உண்டாகும் ஆனால் உன்மனையில் ஓர் சிறுகன்னிகை மடிந்திருக்கின்றது அதை சோமவாரங்களில் விரதமிருந்து பூஜை செய்துவர உன்குடும்பம் மேன்மை பெற்றோங்கும் நாடிய எண்ணம் இன்றும் 12 மணி நேரத்திற்குள் ஜெயமடையும் இது உத்தமம்.

✱

# 6. எருக்கன்பூ

சோதிடம் கேட்பவரே!

உனக்கு ஆண்டவன் அளவற்ற சந்தோஷகரமான வாழ்க்கையும் குறைவற்ற செல்வாக்கும் தொழிலில் பெருத்த லாபங்களையும் அடைய சக்தியைக் கொடுத்திருக்கின்றான் அப்படியிருந்தும் நீ பல மனக்குறைகளைக் கொண்டவன் போல் மேல் வேஷம் போட்டு மேதினியில் நடித்து வருகின்றாய் இதுவும் உனது நல்ல கிரகங்களின் அமைப்பேயாகும் ஆனாலும் நல்லவர்களை நம்பவோ நாணயமான மனிதர்களின் உறவை விரும்பவோ வெறுப்பும் சலிப்பும் அதிகரித்து நயவஞ்சகர்களின் உறவையும், நாசக்காரர்களின் சிநேகத்தை நாடி பலவிதத்தில் நஷ்டமடைகிறாய் ஆனாலும் உன் மனக்கொள்கையை நினைத்து ஒவ்வொரு நிமிஷமும் வருந்தி நிம்மதியற்ற முறையில்தான் உன்மனம் நிர்த்தனிக்கின்றது ஆனாலும் எக்காரியத்தைச் செய்தாலும் உன் மனசந்தேகமே அக்காரியத்தைக் கெடுக்கும் உனக்கு கிரகங்களெல்லாம் நட்புகொண்டிருந்தாலும் உன் முயற்சியில் மாத்திரம் இகழ்ச்சியுண்டு எக்காரியமும் உனக்கு இப்பொழுது பலியாது துணிகரமாக எதிலும் பிரவேசியாதே இது மத்திபம்.

✱

# 7. கஸ்தூரிபட்டை

கிரகநிலையைக் கேட்பவரே!

உனக்கு ஆண்டவனின் கருணையும் ஆப்தநண்பர்களின் ஆறுதலான உதவியும் ஏற்பட உனக்கு அதிகாரமுண்டு தவிர நீ செய்யும் வியாபாரத்திலோ தொழிலிலோ அளவற்ற லாபங்களெல்லாம் ஏற்படுவதற்கு ஓர் அம்சமான ராசியுண்டு சில தினத்தில் மனையில் ஓர் திருமணகாரியமும் நடக்கும் தென்கிழக்கு திசையிலிருந்து நல்ல செய்தியும் அதனால் லாபங்கள் அடைய வேண்டிய அதிர்ஷ்டங்களும் ஏற்படும் ஆதலால் குடும்ப வாழ்க்கையில் மனங்கலங்காதே கபடவஞ்சகர்களினுறவை வையாதே நோயின் கவலையிருந்தாலும் மனநிம்மதியை இழக்காதே எத்தகைய ஆபத்துகள் ஏற்பட்டாலும் நிதானத்தைக் கைவிடாதே புறம்பேசித்திரியும் குரும்பர்களின் வார்த்தைகளை நம்பாதே இப்பொழுது புதன் உனக்கு உச்சஸ்தானத்தில் வந்திருப்பதால் எக்காரியத்தை நினைத்தாலும் எப்பொருளைக் கோரினாலும் அநுகூலமடைவதற்கு அம்சமுண்டு இனி குடும்ப வாழ்க்கையிலே இன்பகரமான செல்வாக்கும் மனையில் பெண்குழந்தை உற்பத்தியும் உண்டாம் ஆனாலும் கபடமானவர்களின் உறவை வையாதே நல்லவராக பேசி மோசம் செய்வார்கள் எதிலும் உன் புத்தியைக்கொண்டு கவனமாகநடந்துகொள் ஆனால் இன்னும் 3 நாளில் எதிலும் நீ வெற்றியடையக் கூடும் கவலைப்படாதே இது உத்தமம்

✱

# 8. கதிர்பச்சை

ராசிபலனைக் கேட்பவரே!

உனது வாழ்க்கையிலே பல அதிர்ஷ்டவசமான லாபங்களையெல்லாம் அடைந்தாலும்கூட நீ முன்னுக்குவர பிராப்தமற்றுப்போனது உன் கெட்ட கிரகங்களின் அமைப்பேயாகும் அந்த கிரகங்களின் காரணத்தாலேயே தான் சில சமயங்களில் குடும்பக் கவலையும் வம்பு வழக்குகளும் தொழில் முகாந்திரத்தில் சோம்பலும் பந்துக்களின் பகையும் தேக அசௌக்கியங்களும் நிமிஷத்திற்கொரு குணபாவங்களும் மூர்க்கமான முன்கோபங்களும் பொருந்தி இருக்கின்றது இருந்தாலும் அடுத்த நிமிஷமே மனது ஆறுதலடையும் பெருந்தன்மையும் அன்புள்ளவர்களை ஆதரிக்கும் அமைப்பும் இரக்கமான உள்ளமும் உனக்குண்டு ஆனாலும் சில நாட்களாக மனதில் ஓர் எண்ணம் குடிகொண்டு நமது எண்ணம் ஈடேறுமா அல்லது அபஜெயமாகுமா என மனதில் அதைரியங் கொண்டிருக்கின்றாய் எதற்கும் அமைதி வேண்டும் சிலநாளில் மனையில் ஆண்குழந்தை உற்பவிக்கும் அறிய பெரியோர்களின் பொருளும் அதனால் செல்வாக்குகளும் அன்பு கொண்டு நீ செய்யும் தொழிலிலே அளவற்ற லாபகரமும் ஆகாதநோய் நீங்கலும் ஆயுள்பலமும் நீ ஆதரவுடன் நாடிய எண்ணம் 6 நாளில் ஜெயமடையும் தன்மையும் உண்டாகும் இருந்தாலும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஏழைகளுக்கு உன்னாலியன்றளவு தர்மம் செய்து வா உன் பீடைகள் நீங்கி பெருமையுடன் வாழ்வாய் இது உத்தமம்

✱

# 9. கனக்காம்பரம்

சாஸ்திரம் கேட்பவரே!

உனக்கு நிறைந்த செல்வாக்கும் சிறந்த யோசகனும் ஆண்டவனுடையகருணையும் அமைந்திருந்தாலும்அதிர்ஷ்டவசமான லாபங்களேதுவும் இதுவரையில் அடைந்ததில்லையே யென்றும் கூட சிலசமயங்களில் வருத்தப்படுகின்றாய் தவிர நீ ஒருதொழிலல்ல பல தொழிலும் கற்றிருக்கிறாய் அப்படி கற்றிருந்தும் அதுகளெல்லாம் பயனற்று தரித்திரதிசையாகவே மாறிமாறி கஷ்டப்படுத்துகிறது. எதைச் செய்தாலும் அதனால் நாம் முன்னுக்குவரவில்லையே என்றும் சிலசமயங்களில் விசனப்படுகிறாய் அதற்காக கவலைப்படாதே இன்றல்ல நேற்றல்ல சிறுவயது முதற்கொண்டே உன்வாழ்நாள் முழுவதும் வறுமைகளைதான் அடைந்து வருகிறாய் அவசரப்படாதே நாடிய ஒருவரால் நல்ல அநுகூலங்கள் உனக்கு ஏற்படலாம் கைவிட்டுபோன பொருளாயினும் ஜீவனையினும் ஒரு மாதத்திற்குப் பிறகுதான் வந்துசேரும் குடும்பத்தில் யாருக்கேனும் நோய் பிணி இருந்தாலும் நீங்க வேண்டியிருக்கின்றது சில தினத்திற்குப் பிறகு மனையில் ஒருவருக்கு திருமணகாரியம் நடக்கும் குடும்பத்தில் கொண்ட பெண்ணினால் விர்த்திகர மேற்பட்டு உன் இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாக துலங்கும் அடுத்த மாதம் 5-தேதிக்குப் பிறகு சுக்கிரன் உன் கிரக ராசிக்கு மாறப்போகிறான் அதற்குப்பின் நல்ல யோகவானாகவும் விளங்கக்கூடும் இப்பொழுது நாடியிருக்கும்படியான எண்ணம் தவக்கமாகவேதான் முடியும் இது சத்தியம்.

✱

# 10. காட்டுரோஜா

இராசியிலுயர்ந்தவரே!

அனேக நாட்களாக திகில் கொண்டிருந்த எண்ணம் பலிதமாவதற்கு ஆண்டவனின் கருணை ஏற்பட்டுள்ளது இதுவரையில் நாம் எத்தொழிலிலும் ஈடேறவில்லையே எள்ளளவேனும் நமது கஷ்டம் நீங்கவில்லையே எந்த காரியத்திலும் ஏமாற்றமாகிறதே இனத்தினர்களின் உதவி ஒத்தாசை இல்லையே என்றும்கூட சில சமயங்களில் இறைவனை நினைத்து வருந்துகிறாய் இனி உனக்கு இந்தவாரத்திற்குப் பிறகு ஈடேறுமார்க்கம் ஏற்பட்டுள்ளது எந்தவிதமான ஒரு நோயாயினும் கெண்டமாயினும் ஏற்பட வழியில்லை உன் ஆயுளையழிக்கவும் மார்க்கமில்லை அதிர்ஷ்டவசமான நல்ல கிரகமெல்லாம் ஒன்று சேர்ந்திருப்பதால் எதிலும் லாபங்களை அடையக்கூடும் கைவிட்டுப்போன பொருளாயினும் கவலையின்றி வந்துசேரும் குடும்ப சஞ்சலங்கள் நீங்கும் மனையில் பிறந்த பிள்ளைகளுக்கு இந்த மாதத்திற்குப் பிறகு மங்களகரமான காரியங்கள் கூடும் ஆனால் சில கொடூர குணமுள்ளவர்களின் உறவை இன்னமும் நீ பாராட்டியிருக்கின்றாய் அவர்களால் உனக்கு பல சங்கடங்களும் சச்சரவும் சதிகிட்டங்களும் நேரக்கூடும் அதற்கெல்லாம் முன்னெச்சரிக்கையாகவே இரு. ஆனால் நீ நாடிய எண்ணம் நல்லவிதமாக இன்னும் 24-மணி நேரத்திற்குள்ளாவது, 24-நாளிலாவது ஜெயமடையும், இது மகா உத்தமம்.

✱

# 11. குண்டுமல்லி

யோகத்திலுயர்ந்தவரே!

உனக்கு ஆண்டவன் சிறந்த யோசனைகளும் பெருந்தன்மையும் கல்விஞான தெளிவும் கொடுத்திருக்கின்றான் அல்லாமலும் உன் வாழ்க்கை முன்னேற்றமடைய பல ஆராய்ச்சிகளும் புத்திசாலித்தனங்களும் உனக்கு உண்டு நீ இருக்குமிடத்தில்கூட சில சத்ராதிகள் உண்டு அவர்கள் உனக்கு ஆபத்து ஏற்பட பல சூழ்ச்சிகளை செய்துவரலாம் அதற்காக வருந்தாதே பொறுமை பெருநஷ்டம் என்பது போல் அவர்களின் சூதும் வாதும் அவர்களையே வேதனைக்குள்ளாக்கும் தவிர உன் பிறவியிலிருந்தே ஜீவியகாலமுழுதும் சுகதுக்கத்தே மாறிமாறி யனுபவித்து வந்தனையே தவிர அளவுகடந்த கஷ்டதிசைகளேதும் உனக்கு ஏற்பட்டதில்லை இப்பொழுதும் சற்று கவலைத் தெளிவாகவேதானிருக்கிறாய் உனக்கு கொடுக்கல் வாங்கல் விவகாரங்களிலும் தொழில் முறையிலும் நல்ல லாபகரமும் குடும்பத்தில் செல்வாக்கும் பாதிக்கும். நோய் நீங்குதலும் மனையில் திருமணமும் மற்றும் பல யோகாதிகாரங்களும் ஏற்பட நேரம் நெருங்கியுள்ளது தவிர தென்திசையிலிருந்து தெளிவான ஒரு நற்செய்தியும் பல லாபங்களும் அடையவேண்டிய அம்சமுண்டு இருந்தாலும் மனதில் ஓர் எண்ணம் உதயமாகியுள்ளது அந்த எண்ணம் நமக்கு ஈடேறுமா அதனால் நாம் பெரு மகிழ்ச்சியையடைய மாட்டோமா என்றும் சில சமயங்களில் எண்ண மிடுகிறாய் அதைரியங்கொள்ளாதே நீ நாடிய எண்ணமானது 10 நாளில் நல்ல விதமாக முடியும் இது உத்தமம்.

*

# 12. குருவேர்

ஆருடம் கேட்பவரே!

உன் வாழ்க்கையில் பணச் செல்வாக்கும், பந்துக்களுதவியும் இல்லாமற்போனாலும், அடுத்த பேர்களின் ஆதரவைக் கொண்டுதான் உன் காலத்தைக் கடத்தி வருகிறாய். இருந்தாலும் பொறுமையென்னும் கடலிலே, வறுமையென்னும் படகில்தான் உனது வாழ்க்கை ஊசலாடி வருகிறது. இப்பொழுது உனக்கு இருக்குமிடத்தில் எந்த வகையிலும் சுகமேற்பட வழியில்லை. இடம் விட்டு வேறிடம் சென்றாலும் அதனால் ஒரு புண்ணியமுமடைய மார்க்கமில்லை. நீ உலகில் பலபேர்களை நம்பி நம்பி மோசம்போயிருக்கின்றாயே தவிர உன் வாழ்நாள் முதற்கொண்டு இதுவரையில் ஒருவராலும் ஒரு நன்மையுமடைந்ததில்லையென நினைக்கும்போது உன் உள்ளம் குமுறுகிறது. இருந்தாலும் இப்பொழுது ஒரு ஜீவனை நம்பி அதனால் மேன்மையடையலாமென்று உனது ஆத்மா மனக்கோட்டைகட்டுகிறது. அது பிற்காலத்தில் மண் குதிரையை நம்பியதுபோல் முடியும், எதற்கும் முன் ஜாக்கிரதையாகவே இரு. அல்லாமலும் இரண்டு வருடகாலமாக ஜென்மராசியில் சனி தொடர்ந்திருப்பதால் உன்னை ஆட்டிப்படைத்து அம்பலத்திலேற்றி ஆகாத நோயிற்கும், ஆபத்தான கண்டங்களுக்கும், அபாரமான பணச் செலவினங்களையும், அண்டிய இடத்தில் நம்பிக்கை துரோக நயவஞ்சனைகளும் ஏற்பட்டிருக்கலாம். இதை நினைக்க நினைக்க உனதுள்ளம் கடிகார நாடிபோல் நிமிஷத்திற்கு நிமிஷம் மாறி மாறி துன்பத்தையடைகின்றது. இருந்தாலும் உன் கவலைத் தெளியவும், கருத்தில் நினைத்த எண்ணம் ஜெயமடையவும் 11-நாள் இருக்கின்றது கவலைப்படாதே மத்திமம்.

# 13. கொடிமல்லி

ஆருடம் பார்ப்பவரே!

அன்பும் அருளும், நிறைந்த நெஞ்சமும், எதற்கும் அஞ்சாத எதிரற்ற உள்ளமும், ஆரியக்கூத்தாயினும் காரியத்தின்மீது கண்ணேட்டமும், கவலையென்பதை கண்டறியாத களிப்புற்ற செல்வாக்கும், சீரும் சிறப்பும் பொருந்திய சீமான் போன்ற சிக்கற்ற வாழ்க்கையும், சினேகித விஷயத்தில் மிகுந்த தந்திரமான புத்தியும், தவிர உனக்கு பெரியோர்களின் பொருளோ, பெற்றோர்களின் செல்வாக்கோ இல்லாமற் போனாலும் தைரியமாக எதையும் செய்து தனம்தேடும் குணபாவமும், சிறுவயது முதற்கொண்டே சித்த பிரம்மையற்று சிக்கனமுடன் குடும்பத்தில் நோக்கத்துடன் எதையும் செய்து முடிக்கும் ஆர்வமும், யாரிடமும் ஆசாபாச விஸ்வாசமும் அமைந்திருப்பது உனது பெற்றோர்களின் பூர்வபுண்யவசமேயாகும். அதிலும் குடும்பத்தில் உன் கருத்துக்கிசைந்தப்படி நடக்க பந்துக்களின் ஒற்றுமையில்லாத காரணத்தால் இன்றும் உன் மனம் சலிப்படைகின்றது. இருந்தாலும் உன் மனோ தைரியத்தைகைவிடாமல்எக்காரியத்தையும்துணிவு கொண்டு செய்துவர வெற்றியடைவாய். தற்போது உன் மனதில் ஓர் எண்ணமானது குடிகொண்டு அக்கவலை நீங்குமா நீங்காதா என்று அதைரியப்பட்டு உன் மனம் அலைமோதுகின்றது, இருந்தாலும் உன் அம்சலக்ஷண அதிர்ஷ்டவசமேன்மையால் கவலைகள் விலகும், கருத்தில் உதித்த எண்ணமும் 4-தினத்திற்குள் ஜெயமடையும் அஞ்சாதே இது உத்தமம்.

✱

# 14. கொங்குமல்லி

யோகாதியோகத்தை பார்ப்பவரே

துன்பமே இல்லாத இன்பமான வாழ்க்கையில் இன்று நீ பலவித தொந்தார்த்தங்களைக் காண உன் மனம் துடிக்கின்றது அதிலும் உன் தைரியத்தைக் கொண்டு பல காரியங்களில்டுபட்டு பல நஷ்டங்களை யும் மன கஷ்டங்களையும் நிந்தையான பெயர்களை யும் பலபேர்களால் உன் விஷயத்தில் பல சதிதிட் டங்களையும் சில நாளைக்குமுன் ஓர் கன்னிகையின் கோள் குண்டுணிதனத்தால் பந்துக்களுக்கு நேர் விரோதியாகவும் மற்றும் இடைஞ்சல் பலவடைந்து சமாளிந்து இப்பொழுதுதான் கலவரப்பட்ட புத்தி யானது சற்று தெளிவுற்று எதையும் ஆழ்ந்து செய் யத்தகுந்த மன திடத்தைக் கொண்டு மேன்மைப் பெற்றுவருகின்றாள் ஆனால் இந்தவாரத்திற்கு பிறகு சுபக்கிரகங்களெல்லாம் உன் ராசிக்கு நட்பு பெறப் போகின்றது பொல்லாத லோபியர்களின் உறவு நீங்கி நல்லவர்களின் சிநேகமுண்டாகும் குடும்பத் தில் பிள்ளைகளுக்கு கல்வியானது மேலுக்கு மேல் விர்த்திகரமடையக்கூடும் சுபடமாக பறித்த பொரு ளாயினும் கை சேராமல் வந்து சேரும் கடன் கொடுத்த பொருள் கிடைக்கும் மனையில் ஒன்றுமை யான வாழ்க்கையும் பொருட் சேதமின்றி வருமான மதிகரிப்பும் நாடிய எண்ணங்களுக்கு நல்ல நிறைய முண்டாகும் இது உத்தமம்.

# 15. கொடி சம்பங்கி

கிரகராசியை பார்ப்பவரே!

உனது வாழ்க்கையிலே நீ வருத்தத்தின் மிகுதியால் இதுவரையில்பட்ட கஷ்டங்களை இவ்வளவென்று அளவிட்டுச் சொல்லமுடியாத நிலையில் தான் ஜீவித்துவருகிறாய், உன் ராசியின் பலன் பல விதத்திலும் நாணயத்தையும், நம்பிக்கையையும் குறைத்துக்கொண்டுவரும் காரணத்தினால் உன் மனம் புண்பட்டு தாமரை இலையில் தண்ணீர்போல் தத்தளிக்கின்றது. ஆனால் உனக்கு ஆண்டவன் எவ்வழியிலும் பிழைக்க சக்தியை கொடுத்திருக்கிறான் அப்படி இருந்தும் எவ்வளவு சம்பாந்தியமேற்பட்டாலும் மறுநாள் காலையில் கையில் அரைகாசும் நில்லாது. உனக்கு கஷ்டங்கள் நிறைந்திருந்தாலும் சொந்தக்காரர்களிடம் வணங்கி எதையும் கேட்கவோ, பேசவோ மனம் இடந்தராத நிலையில் நான் யாரையும் பொருட்படுத்தாமலேயே நடந்துக்கொள்கிறாய், ஆனாலும் உன் திடமான மனதிற்கும் வைராக்கியத்திற்கும் தகுந்த அதிர்ஷ்டவசம் பொருந்தவில்லையே என்றுதான் கவலைப்பட வேண்டியிருக்கின்றது. தவிர இதுவரையில் பலபேர்களை நம்பி மோசம்போயிருக்கின்றாய் அதற்காக கவலைப்படாதே உன் நம்பிக்கையில் ஒருவித லாபங்களும் அடையக்கூடும். உன் வாழ்க்கை சீர்படவும், கவலைகள் தெளியவும், உன் தொழில் முன்னேற்றமடையவும் 20-நாளிருக்கின்றது ஆனால் ஆண்டவனை மறவாமல் துதித்து வந்தால் பல வழியிலும் உனக்கு வெற்றியே கிடைக்கும் கவலைப்படாதே இது மத்திபம்.

★

# 16. கொன்றை மலர்

யோகநிலையை பார்ப்பவரே!

நீ பந்துக்கள் சூழ்ந்த பெருத்த குடும்பத்தில் பிறந்து சீரும் சிறப்பும் செல்வாக்கும் பொருந்த வளர்ந்து சிலநாளில் பெரியோர்களின் பொருள்களோ பெற்றோர்களின் ஆஸ்தி பூஸ்தியோ இல்லாமற் போனாலும் உன் தைரியத்தையே தன லாபமாக்கிகொண்டு பல காரியங்களிலீடுபட்டு தகத்துடன் தற்புகழ்ச்சியின்றி தகுந்தபடி பலர் உதவியைக் கொண்டு முன்னேற்றமடைந்த நீ இன்று உன் குடும்பத்தில் தலைவனாக விளங்குவது ஆண்டவனின் கருணையேயாகும் அப்படி இருந்தும் சில நாளைக்கு முன் ஆகாத கிரகங்களின் பார்வையால் பல சஞ்சலங்களும், பண விரையமும், பாழான நோயின் கவலையும், குடும்பத்தில் பாலர்களுக்கு பல தோஷங்களும், அதனால் மனக் கலக்கமும், எத்தொழிலைச் செய்யினும் ஈடேராமையும், இனத்தினர் பகையும் அதனால் இடம்விட்டு வேறிடம் மாறி இடர் பலஏற்பட்டு இப்பொழுதுதான் நாளுக்குநாள் சற்று கஷ்டம் நீங்கி எதிலும் நஷ்டமில்லாமல் குதுகலமடைந்து வருகிறாய், இனி உனக்கு எக்கவலையும் ஏற்பட ஏறுமாறான கிரகமெதுவுமில்லை, எதிலும் ஈடேற மார்க்கமுண்டு, இடர்புரியும் சத்ராதிகள் கூட்டம் இருந்தாலும் அவர்களின் முன்னிலையில் எதிரின்றி வாழ்வாய், இன்பகரமான வாழ்க்கையும் நன்மையான காரியங்கள் நடைபெறுதலும் நாடியிருக்கும் எண்ணமும் ஜெயமடையும் எதுக்கும் அஞ்சாதே இது உத்தமம்.

✱

# 17. சப்பாத்திபூ

அதிர்ஷ்டவசத்தை பார்ப்பவரே!

உனக்கு நல்ல ராசியின் யோகத்திருல் நோயற்ற வாழ்க்கையும் குறைவற்ற செல்வமும் நுண்ணறிவும் துன்மதியோர் உறவில்லாமையும் நன்மையும் பரோபகாரமும் பொருந்திய மனமும் இருப்பினும் அதை கெடுக்கவும் சில சிநேகமுண்டு ஆருல் அதுவிஷயத்தில் கவலைப்படாதே வஞ்சக நெஞ்சமுள்ள அவர்களின் பொருமைக்குணம் எதிர் பாராதவிதத்தில் அழிவு ஏற்படும் தவிர நீ பலபேர் களுக்கு பல உதவிகளை செய்திருக்கின்ருய் அதுவிஷ யம் நன்றியற்ற முறையில் நடந்தேறிவிட்டது அதை நினைக்க நினைக்க உனது உள்ளம் நாணமடைகின்றது இனியாகிலும் உனது முன்னெச்சரிக்கையில்லாத குணத்தை மாற்றி திருத்திக்கொள் இனி உன் குடும் பக் காரியத்தில் கனிவு வைத்து உனை யீன்ருேர்கட்கு பணியாற்றி மனைவிமக்களுடன் சீர்திருத்தமாக உன் வாழ்க்கைப் பாதையில் சிக்கலின்றி நட அதருல் மிகுந்த நாணயமும் மேன்மையும் உண்டு தேக அசௌக்கியமாயினும் சுகமேற்படும் மனையில் பிறந்த மக்களுக்கு மணம் கூடும் ஆருல் உன் குடும் பத்தில் ஓர் குட்டையான கறுத்த மனிதனுண்டு அன்னவரால் சில கலகங்கள் ஏற்பட்டு பிறகு அக்கல கங்கள் நீங்கும் அக்கலகத்தை பொருட்படுத்தாதே எதை நினைக்கினும் எவ்விதத்திலும் உனக்கே வெற் றியுண்டு என்பதை மாத்திரம் திடமாக தெரிந்து கொள் இது உத்தமம்

★

# 18. சரக்கொன்னை

ஆரூடம் கேட்பவரே!

*காரியத்தில் ஏமாற்றம் கலக்கியானதெல்லாம் பேசும் உனக்கு கிரகசேஷ்டையினால் பலகெடுபுத்தி கொடுமையான எண்ணம் கொடியவர்களின் சிநேகம் கைப்பொருள் விரையம் கொடுத்த பொருளினால் பெருத்த விரோதம் வெளியில் சென்றால் சிரிப்பு வீட்டில் வந்தால் வெறுப்பும் பகைப்பும் பந்துக்கள் மனைவிமக்களை கண்டால் விஷநாகம்போல் சீறல் முன்கோபம் முறட்டுத்தனமான வார்த்தை கட்டுக்கடங்காத செய்கைகள் பல கபடர்களின் உறவு பற்றறுதல் பந்தபாசத்தையும் வெறுத்து பரதேசம் போகலாமா என்றும் ஒருசமயத்தில் நீ எண்ணக்கூடும் பலவித நோயின் கவலை கற்பனையான பேச்சுகளில் நம்பிக்கை கொண்டு கொடூரமாக குடும்பத்தையே விரோதம் செய்யக்கூடிய பாபக்கிரகங்கள் உள்ளது அதை கவனித்து நடந்துகொள் கபடமற்ற சிநேகிதத்தைக் கைவிடாதே களிப்புடன் பேசி கெடுப்பவர்களின் உறவை வையாதே உன் குடும்பத்தில் பல கெடுதல்களை விளைவிக்க சத்துராதிகள் கூட்டம் எதிர்பார்க்கின்றது அதற்கெல்லாம் அஞ்சாதே ஆனாலும் ஜாக்கிரதையாகவே இரு இந்த மாதம் வரையில் உனக்கு கெட்ட கிரகங்களின் கோட்பாடுகள் நடந்து வருகிறது ஆனாலும் நவக்கிரகங்களை நாள்தோறும் தவராமல் 27 நாளைக்கு பூஜை செய்து வர நாளுக்கு நாள் உனக்கு நன்மையுண்டாகும் ஆனால் இச்சமயத்தில் எதையும் செய்யத் துணியாதே இது மத்திபம்.*

★

# 19. சம்பங்கி

பேர்ராசி பலனைக் கேட்பவரே !

பேர்பெருகும் குடும்ப வாழ்க்கையில் பெருமை யற்று பேதமையான குணமும் பேரின்ப பற்றுதலும் பெற்றோர்களுக்குத் தொண்டுபுரியும் கடமையும் வகித்து பெரியோர்களின் ஆசியைப் பெற்று மிகுந்த பெருந்தன்மையுடன் வாழ்ந்து வருகிறாய் இருந்தாலும் களங்கமற்ற உனக்கு கருணைவடிவான உள்ளம் அமைந்திருப்பதே உனது யோகத்தின் அறிகுறியாகும் உன் ஜெனன காலத்தில் சீரும் சிறப்பும் பொருந்த செல்வாக்குடன் தான் உனது வாழ்நாளைக் கழித்து வருகின்றனையே தவிர மனக் குறையோ மனைவிமக்களால் கஷ்டமோ மற்றும் பல சஞ்சலங்களையோ ஒரு வழியிலும் காணாமலேயே கபடமற்று விளங்குவது உனது மேன்மையான ராசிப் பலனேயாகும் இத்தகைய யோகாதிகாரனாக விளங்கினாலும் மனதில் ஒரு எண்ணமானது சில நாட்களாக குடிகொண்டு உன்னை இரவும் பகலுமாக பாதித்து வருகிறது அக்கவலை இன்னும் 3 தினத்தில் நீங்க வேண்டியிருக்கின்றது தவிர என்றுமில்லாமல் உன் குடும்பத்திலே ஒரு நெடுமையான சிவந்தப் பெண் மணியினால் வம்பு வழக்குகளும் ஏற்பட்டு வருகிறது அப்பெண்மணி உன் குடும்பத்தைச் சேர்ந்தவளல்ல இதை நுட்பமாக கவனித்து அம்மங்கையின் உறவை உடனே நீக்கு பிறர்மொழியை கேட்காதே உன் மனம்போல் நடந்துகொள் எதிலும் உனக்கு வெற்றியுண்டாகும் இது உத்தமம்.

✱

# 20. சாமந்தி

ராஜயோக முள்ளவரே!

உனக்கு கடவுளின் கருணையால் கண்டவர் திடுக்கிடும் கனந்தங்கிய செல்வாக்கான வாழ்க்கையும் நோயற்ற தேக ஆரோக்கியமும் கபடமற்ற பெரியோர்களின் உறவு கூடுதலும் காலமெல்லாம் உனை பகைத்துத் திரியும் பகைவர்கள் வணக்கப்படும் மேன்மையும் சில நாளில் கன்றுகாலிகொள்ளவும் கிணறு தோண்டவும் வீடுகட்டவும் புதியதாக ஓர் தொழிலை ஆரம்பிக்கவும் பாலர்களை பள்ளியில் சேர்க்கவும் மருந்துண்ணவும் தேவாலயத்திற்கு யாத்திரை போகவும் நன்மையுண்டாகும் இந்த வருஷத்தில் உன்சொந்தமான பந்துக்களில் ஓர் விவாக காரியமும் உடன் பிறந்தவர்களுக்கு புத்திர உற்பத்தியும் புதுமனை புகுதலும் மற்றும் வேண்டிய நன்மைகளும் ஏற்பட வேண்டிய அம்சமுண்டு ஆனாலும் உனது யோகதிசையை முன்னிட்டு ஒருவருக்கு உதவி செய்ய எண்ணமிட்டிருக்கின்றாய் அது விஷயத்தில் அதிக சிரத்தையுடன் ஆலோசிக்க வேண்டும் அதனால் உனக்கே ஆபத்து ஏற்பட்டாலும் ஏற்படலாம் எதையும் கவனித்துச் செய் இருந்தாலும் வாரத்திற்கொருநாள் ஏழை எளியவர்களுக்கு 32 வித தானத்தில் உன்னாலியன்டு தானமொன்றை செய்துவா உன் குடும்பம் மேலுக்குமேல் செழித்தோங்கும் எதை நினைக்கினும் தடையின்றி வெற்றியடையும் இது உத்தமம்.

✱

# 21. சூரியகாந்தி

**மனக்குறை கொண்டவரே!**

உனக்கு ஆண்டவன் நல்ல குணத்தையும் பரிசுத்தமான மனதையும் கொடுத்திருக்கிறானேயொழிய அதிர்ஷ்டவசமான லாபங்களொதுவும் உனக்கு காட்டவேயில்லை இதுதான் இப்படியிருந்தாலும் உனது ஆகாத நேரத்தை அநுசரிக்காமல் மாளாத காரியத்துக்கு மனக்கோட்டை கட்டியிருக்கின்றாய் இதுபோல் இதுவரையில் எத்தனையோ காரியங்களை முயற்சித்து பயனில்லாமல் அடைந்த அவமானத்தை எண்ணாமல் இன்னும் பகல் கனவு காணாதே தவிர தற்போது ஒரு பொருளையோ தொழிலையோ ஜீவனையோ நாடிகேட்டிருக்கலாம் அது நியாயப்படி உனக்கு கிடைக்க அதிகாரமில்லை அண்டினபேர்கள் உன்னை அவமதிப்பதுடன் அபாண்டமான பல குற்றச்சாட்டுகளையும் நிந்தையான பெயரையும் தர உன் கெட்ட கிரகங்கள் எதிர்பார்க்கின்றது மனக்கவலையாலும் அது காலம் மாற மாறத்தான் அது மறையும் நோயாயினும் அது நாளுக்குநாள் தான் உன் ஜீவநாடிபோல் சுகமேற்படலாம் இருந்தாலும் உன் கஷ்ட திசையை எண்ணி கலங்காதே எட்டாத காரியத்திற்கு ஏணி கொண்டு முயற்சிக்காதே உன் முயற்சி முடியவென்றால் 3 வாரம் போகவேண்டும் இது மத்திபம்.

# 22. செவ்வலரி

ஆருடம் கேட்பவரே!

நீ உறவின் முறையாரின் ஒத்தாசைகளையோ உற்றார்களின் செல்வாக்குகளையோ எதிர்பாராத போதிலும் உன் கிரக நட்பின் காரணத்தினால் ஊக்கமாக எதையும் செய்யவும் அதில் வேண்டிய லாபங்களையும் மேன்மைகளையும் அடையும் தன்மையை ஆண்டவன் உனக்கு அளித்திருக்கிறான் அதனாலேயே ஒருவரின் தாக்ஷண்யத்தையோ சகாயத்தையோ விரும்பாமல் நடந்துகொள்ளும் நிலையில்தான் உன் வாழ்நாளைக் கழித்து செல்வாக்குடன் விளங்குகின்றாய் தவிர குடும்பத்திலும் மற்றெந்த காரியத்திலும் தைரியமான திடகாத்திரமும் பெருந்தன்மையும் ஏழை எளியவர் மீது இரக்கங் காட்டும் நல்ல குணமும் அளவற்ற தன சம்பத்தும் பெற்று உன் வாழ்க்கையானது இன்பகரமாக விளங்கிவருகிறது இதிலும் சில சத்துராதிகள் கூட்டம் உனக்கு இடர் புரிய எண்ணமிடலாம் ஆனால் அவர்களின் எண்ணத்தில் ஏமாற்றமுண்டு எந்த காரியத்திலும் வெற்றி உன்னுடையதே அதைரியப்படாதே தவிர குறைவற்ற செல்வாக்குகள் பொருந்தியிருந்தாலும் இச்சமயத்தில் ஒருவரின் உதவியை நீ நாடவேண்டியிருக்கின்றது அது இந்த மாதம் முடிவதற்குள் அவசியம் முடியும் தவிர ஓர் ஜீவனின் வருகையைக் குறித்தும் கவலையடைகிறாய் அதின் பெயர் ராசிக்குத்தகுந்த கிரக கோட்பாடுகள் அமைப்புபோல்தான் உனக்குக் கிடைக்கும் இது உத்தமம்.

*

# 23. செந்தாமரை

யோகத்திற் சிறந்தவரே!

கடவுளின் அருளினால் உனக்கு காருண்யமான உள்ளமும் கல்வியிற் கரைகண்ட மேன்மையும் அதின் மிகுதியினால் மேலானத் தொழில் முறையும் கஷ்டநிலையில்லாத கனந்தங்கிய வாழ்க்கையும் கருத்துடன் பொருள் சம்பாதிக்கும் மனதிடமும் காரியத்தில் ஜெயமடையும் கண்ணோட்டமும் உனக்கு இருந்தும் பண உதவி செய்யவோ தேக ஒத்தாசை புரியவோ யாரும் சகாயமில்லாத காரணத்தினால் சற்று தயக்கமும் தியக்கமும் கொண்டு இச்சமயத்தில் நீ வாடவேண்டியிருக்கின்றது அதற்காக வருந்தாதே உனக்கு பயந்து மித்திரர்கள் உதவியில்லாத போதிலும் ஆண்டவன் சகாயம் மாத்திரம் எப்பொழுதுமுண்டு எதையும் துணிந்துச்செய் ஒருவரின் உதவியை நாடாதே எதிரொன்று பேசி புறமொன்று பேசும் வஞ்சகர்களின் உறவை கோராதே பலபேர்களின் கஷ்டத்திலீடுபட்ட பொருள்களை பறித்து ஆஸ்திபூஸ்தி தேடாதே அவதைரியங்கொண்டு எக்காரியத்திலும் பிரவேசிக்காதே தைரியமாக எதையும் செய் அதனால் உனக்கே வெற்றி கிடைக்கும் சில நாளில் செல்வச்சீமானாக விளங்கவேண்டிய ராசியுண்டு தவிர இச்சமயத்தில் ஒரு ஜீவனை நம்பி அதனால் நமக்கு அநுகூலமுண்டாகுமா அல்லது பிரதிகூலமாகுமா என்று கவலைப்படுகிறாய் அதை நம்பாதே அதனால் உனக்கே சேதமுண்டாகும் இது உத்தமம்.

✱

# 24. செண்பகம்

ஆருடம் கேட்பவரே!

கவலையால் மனம் கலங்குகின்றது கஷ்டநிலை யைக் காணக்காண கண்ணீர் வடிகிறது கபட நெஞ்ச முடையவர்களின் வலையில் உன் வாழ்க்கையானது சிக்குண்டு மனம் குலைகின்றது கண்டவர் திடுக்கிடும் படியான வாழ்க்கையில் இவ்வளவு தரித்திரதிசை தாண்டவமாடுகின்றதே என உன்மனம் கடவுளை நினைத்து இரவும் பகலுமாக ஏக்கங்கொண்டு வருந்து கின்றது இனி என்ன செய்யலாம் எவ்விதமாக நமது வாழ்க்கையை நடத்தலாம் எத்தொழில் செய்தால் இடுக்கணில்லாமல் வாழலாம் யாரிடம் போய்என்ன கேட்கலாம் நாளுக்குநாள் நம் குடும்பம் நலிந்து வருகின்றதே என கவலைப்படுகின்றாய் அல்லலை நினைந்து தொல்லை யடையாதே சுகதுக்கம் இரண் டும் சமமாக பாவித்து நட இதில் சந்தேகப்படாதே சீக்கிரத்தில் உனக்கு நல்ல யோகதிசை ஏற்படப் போகின்றது அதின் காரணத்தினால் கஷ்டங்களெல் லாம் நீங்கும் நீ இஷ்டங்கொண்ட காரியத்திலே சித்தியுண்டு நஷ்டமின்றி எத்தொழிலிலும் லாபகர முண்டு ஆனால் தற்பொழுது பலவித கவலைகளைக் காட்டலாம் நோய் நொடியாயினும் ஆயுள் ரேகை யின் அமைப்புபோல் நிவர்த்தியாகும் கடன்காரர் களின் தொல்லையால் சில கஷ்ட நிஷ்டூரங்களைக் காட்டலாம் இந்த சஞ்சலத்தினால் இடம் விட்டு வேரிடத்திலும் மாற்றிவைக்க அம்சமுண்டு தவிர உன் மனதில் ஓர் எண்ணமுதித்து அக்காரியத்தில் நமக்கு வெற்றியுண்டா தோல்வியுண்டா என்று எண்ணமிடலாம் அது விஷயத்தில் எதிர்பாராதே எண்ணத்தில் பின்னமுண்டு இது மத்திபம்.

# 25. துவனம்

யோகதிசையை பார்ப்பவரே!

கடல் சூழ்ந்த புவியில் உடல் பொருளாவி மூன்றையும் தத்தம் செய்யும் முறையிலே இறக்கமுடன் தானதர்மத்தில் சிறந்தும் மிகவும் புனிதமுடன் ஜீவித்து வருகிறாய் ஆனால் உனது கிரகராசிகளும் அதற்குத்தகுந்தபடியே அமைப்புடன் மிகுந்த செல்வாக்கைத்தர நபகிரகங்களும் அநுகூலமாக இருக்கின்றது. இருந்தாலும் இச்சமயத்தில் உனக்கு நல்ல யோகங்கள் நடந்து வருகிறது. அதனால் உன் குடும்பத்தில் எவ்வித ஆபத்துகள் நேர்ந்தாலும் சூரியனை கண்ட பனிபோல் விலகும், செல்வாக்கு பொருந்திய உன் குடும்பத்தில் ஒரு தொல்லையும், வல்வினைகளும், பொல்லாப்புகளும் நீங்குவதுடன் கள்ளங்கபடமற்ற கருணையின் வழிவான உன் நெஞ்சத்திற்குகந்த சீரும் சிறப்பும், தொழில் மேன்மையும் வாகனுதிகளால் லாபஸ்தானமும், மனோகோல மகிழ்ச்சியும், மைந்தர்களால் சந்தோஷமும், மனையில் மடிந்திருக்கும் ஓர் சிறு கன்னிகையின் பக்கத்துணையும், அதனால் மேன்மையும் பாக்கியச் சிறப்பும், பந்துக்களின் ஒற்றுமையும், சதிபதிகளின் சச்சரவற்ற வாழ்க்கையும், எக்காரியத்திலும் வெற்றிகரமும், வெகுநாட்களுக்கு முன் பிரிந்தவர்கள் பிரமிக்கத் தக்க முறையில் வந்து சேருதலும், மூதோர்களின் பொருள் சேர்க்கையும் முக்கியமாக பெரிய வார்த்தையின் வாக்குறுதியும் ஏற்படும். 8 தினத்தில் எக்காரியத்திலும் நீ வெற்றியடைவாய் உத்தமம்.

✱

# 26. தாழம் பூ

அதிர்ஷ்ட வசத்தில் மிகுந்தவரே!

உனது கெட்ட கிரகங்களின் கோளாறினாலும் உனது ஜென்மராசியின் துற்பலத்தினாலும் வெகு நாட்களாக கவலைகளையெல்லாம் அடைந்து இப்பொழுதுதான் தேறித்தெளிந்து யோகம் பெருக மனக்கவலையை விடுத்து மகிழ்வுகொண்டு உன் குடும்பத்தை நடத்தி வருகின்றாய் இனி உன் குடும்பமானது செழிப்புற்று விளங்குவதுடன் சிறந்த செல்வாக்கும் நிறைந்த பொருளுதவியும் பொருத்தமான உத்தியோக முறையும் கபடமற்றவர்களின் உறவும் கூடுவதுடன் வெகுநாளைக்கு முன் காணாமற்போன ஜீவனாயினும் ஓர் பொருளாயினும் இன்னும் ஒரு வாரத்தில் களவு செய்தவர்கள் யாரென்பது புலன் தோன்றும் மனையில் ஓர் ஆண்சிசு தரிக்கும் மனையில் பொன்பூஷண சேர்க்கையும் மாடுமனைகோல பாஸ் பாக்கியமும் மேற்குதிசையிலிருந்து ஓர் நன்மையான செய்தியும் அதனால் சந்தோஷமும் லாபகரமும் ஏற்படும் உனைக்கண்டு பொறாமைக் கொள்ளும் பொல்லாத சத்ராதிகள் கூட்டம் பூண்டோடொழியும் வாயார உரைத்தவாக்கிற்கு மாறுதலுண்டாகாது மனதார அப்பொருள் கேட்கினும் தடையின்றி தருவார்கள் உனக்கு வெளியூர் பிரயாணம் போவதற்கு ஓர் ராசி இன்னும் ஒருவாரத்தில் ஏற்படப்போகின்றது அதனால் வேண்டிய லாபங்களும் அடையவாய் கோரிக்கையானது ஜெயமடையும் அந்தசாதே உத்தமம்.

★

# 27. துலுக்கும் சாமந்தி

மனக்கவலை கொண்டவரே!

வருத்தமே சதாகாலமும் உன் உருவை குலைக்கின்றது குடும்பத்திலுள்ள வம்பு வழக்குகளின் மேலீட்டினால் உள்ளம் வேதனையும், வாதனையும் அடைகின்றது. வாய்த்திருக்கும் நோயினால் சில நாட்களாக கவலையும், பண விரையமும், மனதில் பல பயங்கர எண்ணங்களும் தோன்றுகின்றது. நீ யாரிடமும் உண்மையாக நடந்துகொண்டாலும் உன் மீது பல நிந்தனையும், நிஷ்டூரப் பேச்சுகளும் ஏற்படலாம். ஆகாத கிரகங்களின் சேஷ்டையினால் பல ஆபத்துகள் நேரலாம், நீ ஜனித்த காலமுதல் இதுவரையில் ஓர் பலனையும் அடைந்ததில்லையே யென நினைக்கும்போது உன் மனம் பலவித சஞ்சலமடையலாம். உன் வாழ்க்கையில் நிர்பந்தமான கஷ்டங்களை காணலாம். கண்டாலும் கவலைதானதிகரிக்குமே யொழிய கண்ணியமான செல்வாக்குப் பெருகவோ அல்லது குடும்பத்தில் மன நிம்மதியுடனிருக்க உனக்கு ஆண்டவனின் அமைப்பு ஏற்படாததுபற்றி வருந்தவேண்டியிருக்கின்றது தவிர இதுவரையில்தான் நீ அடையாத கஷ்டங்களையெல்லாம் அடைந்துவந்தாயென்றாலும் அடுத்தமாதத்தில் ஓராபத்தோ அல்லது ஒரு கண்டமோ ஏற்படப் போகின்றது. அதற்கு முன்னெச்சரிக்கையாகவே யிரு, உனக்கு இக்கஷ்டங்கள் ஒழியவேண்டுமென்றால் மிகவும் சாமார்த்தியமாக காலத்தை கழிப்பதுடன் நம்பிக்கையுடன் நவகிரகங்களை 41-நாளைக்கு பூஜை செய்துவந்தால் நாளுக்குநாள் சுகமேற்படும். இது சத்தியம்.

# 28. நந்தியாவட்டை

ராசிப்பலனைக் கேட்கும் நண்பரே!

உனக்கு நல்ல கிரகங்களின் அமைப்பினால் நிறைந்த தனமும் சிறந்த செல்வாக்கும் தளர்ந்த உள்ளமும் குறைந்த கோபமும் தெளிந்த கல்வியும் பொருந்தியுள்ளது ஆனால் உன் மன சந்தேகத்தால் பல எண்ணம் பல யோசனை செய்து நாம் குடும்ப வாழ்க்கையில் கவலையின்றி வாழ்வோமா? நாம் கோரிய எண்ணம் கூடி வருமா? நம்பிய ஜீவனால் நலம்பெற முடியுமா? நம் தொழில் நீடித்து நல்ல லாபத்துடன் ஓங்குமா நமது வாழ்க்கையிலே ஒரு இன்னலும் ஏற்படாமல் இன்பமான வாழ்க்கை யுண்டாகுமா என ஆண்டவனைக் குறித்து இரவும் பகலுமாக ஏக்கங்கொண்டு வருந்துகிறாய் கவலைப் படாதே இனி உனக்கு எந்த கவலையும் ஏற்பட கெட்ட கிரகங்களின் பார்வை ஏதுமில்லை ஆதலால் உன் வாழ்க்கையே ஓர் மிக பெருமையுடன் விளங் கும் அண்டிய பேர்களால் பல ஆதாயங்களை நீ யடையக்கூடும் ஆபத்தான நோயாயினும் அருள் நிறைந்த உன் குலதெய்வங்களின் சகாயத்தினால் நீங்கும் கூடிச்செய்யும் வியாபாரம் அளவற்ற லாபத் தைத் தரும் இதுவரையில் உனை ஏய்த்து பொருள் பறித்த இரும்பர்களும் உன் குடும்பத்தில் கலகம் விளைவிக்கும் குரும்பர்களும் இருக்குமிடம் தெரியா மல் ஒழிவார்கள் சிலநாளில் சொந்தமான மனைக் கோல உனக்கு ஓர் மார்க்கமுண்டு எண்ணிய எண் ணமும் இன்றும் 14 நாளில் பலவிதமாகும் இது உத்தமம்.

✱

# 29. நாகமல்லி

யோகரானியை பார்ப்பவரே !

உனக்கு பலவிதத்திலும் நல்ல ஆராய்ச்சிகளும் அமைப் பானகுணமும் ஆதாரமுள்ள பந்துக்களின் அநுகூலங்களும் ஆழ்ந்து யோசித்து எதையும்செய்து முடிக்கும் ஆர்வமும் உனக்கு அமைந்திருந்தாலும் அதிகமான லாபங்களைக் காணவோ அதிர்ஷ்டவச மான அம்சங்களை யடையவோ அவ்வளவு மேன்மை யான கிரகங்களொன்று மில்லை இருந்தாலும் உன் மனோ தைரியத்தைக்கொண்டே எதையும் செய்ய வும் அதில் நற்கியாதியும் மேன்மையும் லாபங்களு மடைவதுமாக ஜீவித்து வருகிறாய் இருந்தாலும் இந்தமாதம் கடைசியில் சந்திரன் கன்னியாராசிக்கு வரப்போகின்றான் அதுமுதற்கொண்டு எதிலும்நல்ல லாபங்களை யடையக்கூடும் உன் பேச்சுவார்த்தைக ளில் பிசகிருக்காது உனக்கு நேர்விரோதிகளாயினும் இச் சமயத்தில் உன்னுடன் கூடி ஒரு மித்து எதையும் முடித்து வைப்பார்கள் பலநாட்களாக பாதித்த நோயாயினும் மணிமந் திர ஔடதத்தால் மாறிப் போகும் கொடுக்கல் வாங்கல் விவகாரங்களில் ஒரு விதமான நஷ்டத்தையுமளிக்காமல் லாபகரமாகவே இருக்கும் தவிர உனக்கு வெளியூர் பிரயாணம் போ கவோ அல்லது ஓர் தொழில் முகாந்திரத்திலீடுபட வோ எண்ணமுண்டு அந்த எண்ணமானது உனக்கு இன்னும் 5 தினத்தில் ஜெயமாகும் அதனால் மிகவும் தனசம்பத்து அடையக்கூடும் தவிர உன் மனதில் கோரிய எண்ணமானது தடையின்றி முடியும் அது உத்தமம்.

★

# 30. நித்தியமல்லி

ஆருடம் பார்ப்பவரே !

மனக்கவலையால் மெலிந்து மனதார குடும்பத்தையும் மனைவி மக்கள் சுற்றத்தையும் பகைத்து மனகிலிகொண்டு திகைப்பூண்டு மிதித்தவர்போல் தியங்கிவாடுகிறாய் உனக்கு இச்சமயத்தில் நிதான கிரகங்களெல்லாம் வாதான முறையில் சூதுகளைச் செய்யநிதுள்ளோர்களின் நேசத்தைப்பாராட்டுகின்றது தவிர சனியனின் கோளாறினால் உனது சந்தோஷங்களெல்லாம் சலிப்பிலீடு படுத்தும் ஓர் கறுத்த கன்னிகையினால் குடும்பத்தில் கலகமும் கைப்பொருள் விரையமும் பலஇடைஞ்சல்களையும் காணக்கூடும் தவிர சில நாளில் உனைக்கெடுக்கும் பொருட்டு ஒருவர் உதவிகோருவார் ஆனால் அவருக்கு உபகாரம் செய்வாயானால் அதனால் எப்படியும் அபகாரமே நேரும் சில பேர்களின் கலகத்தால் குடும்பத்திற்கே கவலை ஏற்படும் உன் மனநோக்கமெல்லாம் பகற்கினவாக மாறும் மனையில் உனக்காக குறித்திருக்கும்படிப்பான காரியம் தவறிப்போகும் தரித்திரதிசை தாண்டவமாடும் அதன் காரணத்தினால் பல இழிவான தொழில்களையும் செய்ய நேரிடும் கலங்காத நெஞ்சமாயினும் நலங்குன்றி சித்தப்பிரமை கொள்ளும்படி நேரிடும் படமுடியாத கஷ்டதிசையைத்தரும் பல எண்ணங்களை மனதில் நினைக்க அதில் ஒரு எண்ணமும் பலியாது தயக்கமுண்டாகும் எக்காரியமும் தடங்கலாகும் இது மத்திபம்.

# 31. நீலாம்பரம்

ராசியின் பலனைக்கேட்பவரே !

உலகிலே ஆண்டவன் அருள்பெற்ற வாழ்க்கை உனக்கு சிறுவயது முதற்கொண்டே விட்டது அதிலும் புதன் கும்பராசியில் வந்து மகாதிசையிலிருக்கும் குருவை நட்புகொண்டிருப்பதால் நீ இடம்விட்டு வேறிடம்போனாலும் ஓர் வியாபாரம் செய்தாலும் குடிவிட்டு வேறு குடிபோனாலும் நல்ல லாபத்தையடையக் கூடும் தவிர மலைபோன்ற துன்பமாயினும் பனிபோல் விலகுமே யன்றி மனதிற்கு கவலையோ தேகத்திற்கு பலயீனத்தையோ ஆயுளையழிக்கவோ அதிகாரமில்லை வஞ்சகர்களினுறவு அகன்று சஞ்சலமெல்லாம் நீங்கி இன்பமான வாழ்க்கையுண்டாகும் உனக்கு கடவுளின் கருணையால் தயைதாக்ஷண்யமும் பரோபகாரமும் ஏழைமக்களிடம் இரக்கமும் சில தினத்தில் சீரும் சிறப்பும் பொருந்திய ஓர் பெண் குழந்தை பிறக்கும் சிலநாளில்வடக்குதிசையிலிருந்து ஓர் நன்மையான செய்தியும் அதனால் வெகுலாபமும் அடையக்கூடும் இது வரையில் வாரத பந்துக்களும் வந்து சேருவார்கள் மனையில் பிறந்த குழந்தைகளுக்கு ஞானம் கல்வி ஓங்கும் மேன்மையான உத்தியோகமோ தொழிநலம் உனக்கு ஏற்படும் உலகில் ஒருவரின் தாக்ஷண்யமில்லாமல் நீ வாழவேண்டிய அம்சமுண்டு உன் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் கன்னிகையால் வேண்டிய பொருள்களெல்லாம் வந்துசேரவும் ஒரு அம்சமுண்டு இருந்தாலும் உன் மனையிலே ஒரு மணமாகா சிறுவன் மடிந்திருப்ப துண்டு அந்த சிறுவனை திங்கட்கிழமைகளில் பூஜித்துவா நாளுக்கு நாள் க்ஷேமத்தைத்தரும் எண்ணமும் ஜெயமாகும் அஞ்சாதே இது உத்தமம்.

★

# 32. பத்ராக்ஷி பூ

ரேகராசியை பார்ப்பவரே!

உனக்கு நல்ல யோகத்தையும் க்ஷேமத்தையும் தருவதற்கு சுக்கிரன் நல்ல இடத்தில் சஞ்சரித்து இருப்பதால் இனி உன் மனக்கவலைகள் நீங்கும் தொழில் ஓங்கும் சத்திராதிகள் கூட்டம் உனைக்கண்டால் ஏங்கும் தவிர குடும்ப விஷயத்திலே சதிபதிகள் சுகவாழ்கையும் பாலர்களுக்கு கல்வியானது விர்த்திகரமும் வெளிநாட்டிலிருந்து சந்தோஷமான நல்ல சேதியும் நோயற்ற வாழ்க்கையும் மன நிம்மதியும் கொடுக்கல் வாங்கலில் நல்ல ஆதாயங்களும் குடும்பத்தில் குற்றம் குறை நீங்குதலும் கைவிட்டுப்போன பொருளாயினும் கவலையின்றி சேரும் வீடு நிலம் வாகனாதிகளும் பால்பாக்கியமும் ஏற்பட நல்ல அமைப்புண்டு எதிலும் நல்ல அதிர்ஷ்டவசமான லாபங்கள் கிடைக்கும் ஒருவருக்குரைத்த வாக்கு உறுதியாக இருக்கும் மனையிலே மக்களுக்கு சுபகாரியங்கள் நடக்கும் கொண்ட பெண்ணின் குடும்ப வகையிலே வேண்டிய உதவி எல்லாம் உனக்கு ஏற்படக்கூடும் திசை மாறின பேர்களாயினும் சில நாளைக்குள் அவர்களிருக்கும் இடமானது நீ கேழ்விபடக்கூடும் தவிர உன் மனதிலே ஒருகவலையை வைத்துக் கலங்குகிறாய் அந்தக் கவலையானது இன்னும் 7-நாளில் நீங்குவது மல்லாமல் நீ எண்ணிய எண்ணங்களும் வெகுசீக்கிரத்தில் ஜெயமடையும் இது உத்தமம்.

# 33. பன்னீர் புஷ்பம்

**கிரகத்தின் ராசியை பார்ப்பவரே!**

உனக்கு அதிர்ஷ்டவசமான லாபங்களெல்லாம் ஆகாத காரியங்களாகவே காக்ஷியளிக்கின்றது அபாண்டமான பல குற்றங்களும் அதிகரித்து அளவுக்கு மீறிய துயரத்தினால் உள்ளம் ஆண்டவனைக் குறித்து அலைமோதுகிறது அமைப்பான எண்ணங்களில் அபகீர்த்தியும் அபஜெயமும் அடைந்து அபலமாக முடிகின்றது அகாத கிரகங்களின் கோட்பாடுகள் தேக அசௌக்கியத்தையும் ஆனந்தமான வாழ்க்கையின் செல்வாக்கை குறைப்பதுடன் உள்ளம் ஆறுதலற்று விளங்குகிறது அஞ்சாதே சில நாளில் உனக்கு நன்மை யுண்டாகலாம் இதற்குள்ளாக பல யோசனைகளைப் பயன்படுத்தி பரிதவிக்காதே பல விதமான தொந்தார்த்தங்களில் சிக்குண்டு உன் பந்துக்களையும் பெற்றோர்களையும் நல்ல சிநேகிதர்களையும் நிஷ்டூரப்படுத்தாதே உன் குடும்பத்திலே ஒருவருக்கு நல்ல காரியத்தைப்பற்றி குறிக்கலாம் ஆனால் அதில் நீ பிரவேசித்தால் அக்காரியத்தில் கலகமும் கவலையும் பல இடைஞ்சல்களும் நஷ்டங்களும் ஏற்பட நியாயமுண்டு தவிர சொற்பலாபங்களையெல்லாம் உன்மனது பெருமையாக நினைத்து ஏமாற்றமடையும் பெரியோர்களின் பொருளாயினும் அதற்கு அழிவு ஏற்படும் எண்ணங்கள் எதை நினைத்தாலும் இப்பொழுது முடியாது நவக்கிரகங்களை நாள் தோறும் பூஜித்துவா நீ படும் கஷ்டங்கள் சிலதினத்தில் ஒழிந்து உன் எதிர்கால வாழ்க்கையானது நிம்மதியாக இருக்கும் இது மத்திபம்.

*

# 34. பழகமல்லி

யோகராசியைப் பார்ப்பவரே!

கண்டவர் திடுக்கிட கனம்பொருந்திய வாழ்க்கையும் கதியென அடைந்தவர்களை காப்பாற்றும் காருண்யமும் கண்ணால் கண்டதை எவ்விதமேனும் காரியத்தின் மீது கண்ணோட்டமாய் செய்து முடிக்கும் ஆர்வமும் கபடமில்லாமல் தன்னுயிர்போல் மன்னுயிரை பாவிக்கும் மனோபாவமும் கண் கலங்கும் எவ்விதமான குறை குற்றங்கள் குடும்பத்தி லேற்பட்டாலும் வானமிடிந்தாலும் உன் உள்ளம் கலங்காத தைரியமும் ஆண்டவன் உனக்கு அளித்திருக்கின்றான் அதனாலேயே இதுவரையில் எவ்விதமான கவலைகளையும் எதிர் பாராத பல இடைஞ்சல்களையும் சமாளித்து வருகிறாய் உன் இளகிய உள்ளத்திற்கும் தைரியத்திற்கும் தகுந்த குணபாவ மொன்றுண்டு அதாவது கவலை யுற்றிருக்கும் யாரைக்கண்டாலும் அது உன் கண்ணிற்பட்ட புண்போல் அனுசரித்து ஆதரிப்பதும் அதற்குக் கைம்மாறாக அவர்கள் விளைவிக்கும் பல அபாய குறிகளுக்காக மனம் வேறுபட்டு ஏனிப்படி நடந்துக்கொண்டோமென உன் மனதை நீயே நொந்துக்கொள்வதுமாகவே உன் உன் வாழ்க்கைப் பாதையில் நடந்து ஜீவியக்காலத்தைக் கடத்திவருகிறாய் உன் குணத்துக்குத் தகுந்தப்படி நல்ல திசாபுத்திகளும் இச்சமயத்தில் அமைந்துள்ளது ஆனால் எதிலும் வெற்றிபெறுவதற்கு வெகுநாளில்லை இன்னும் 9-நாளிருக்கின்றது அதன் பிறகு உன்தொழில் முறையும் எண்ணங்களும் லாபத்துடன் ஜெயமடையும் அஞ்சாதே இது உத்தமம்.

✱

# 35. பட்டுரோஜா

கிரகராசியிலுயர்ந்தவரே!

உனக்கு யாரிடத்தும் அன்புந்தும்பும் அநுசரணையும் ஜயமென வந்தவர்களுக்கு ஆதரவளிக்கும் தரும குணமும், அருள் நிறைந்த ஆண்டவன் பக்தியும், ஆதாரமான பந்துக்களின் உதவியும், அமைப்பான தொழிலும், அதில் அபாரமான லாபங்களும், அழியாத செல்வாக்கும், ஆகஷியான சுபக்கிரகங்களின் ஆதாயமான மேன்மைகளும் பொருந்தியது உன் பூர்வ ஜென்மத்தின் புண்ணியவசமேயாகும், இருந்தாலும் மனதில்மாத்திரம் ஓர் சந்தேகம், அதாவது சிலநாளைக்குமுன் ஆகாத கிரகங்களின் பார்வையால் பல காரியங்களில் நஷ்டமும், குடும்பத்திலே கஷ்டமும், ஆபத்தான பல கண்டங்களால் பொருள் விரையமும், அடங்காத பிள்ளைகளாலும் உள்ளன்பில்லாத சிநேகிதர்களாலும் அதிக கவலைகளெல்லாம் அடைந்திருக்கின்றாய். அதின் காரணத்தினால் மனம் ஆறுதலடையாமல் அவதைரியமேயடைகின்றது. ஆத்திரப்படாதே, அரியபெரியோர்களின் ஆதரவினால் வேண்டிய அனுகூலங்கள் ஏற்படும். ஆகாத நோயும், ஆபத்தான கண்டங்களும், அபாண்டமான பல குற்றங்குறைகளும் விலகும். இந்த வருடத்தில் மனையில் ஆண்குழந்தையொன்று பிறக்கும் அரசைப்போன்ற குணபாவம் நிறைந்த சத்ராதிகளின் கூட்டம் பூண்டோடழியும். ஆனால் எண்ணிய எண்ணம் 67-மணி நேரத்தில் ஜெயமாகும் அச்சப்படாதே இது உத்தமம்.

✱

# 36. பாதிரிமலர்

சோதிடம் பார்ப்பவரே!

உன் கவலையே கண்ணீர் விடச் செய்கிறது கட்டுக்கடங்காத விஷப்பாம்பு போன்ற பிள்ளைகளால் குடும்பத்தில் பல கலகங்களும் பந்துக்களின் பிரிவினைகளும் ஏற்பட்டு உன் உள்ளத்தை உருக்கி திகிலடையச் செய்கிறது இதின் காரணத்தால் கவலை மேல் கவலை கஷ்டத்தின் மேலீட்டினுல் கண்டபடியான கவனக்குறைவு கடன்காரர்கள் தொல்லை இதுகளின் காரணத்தினுல் பல இடங்களில் பரதேசி போல் திரியவும் தனிந்து தனிமரம்போல் நிற்கவும் நேரிடும் தங்கமாயிருப்பினும் தவிட்டிற்கு மாற்றும் மடியாக நேரிடும் உன் குடும்பம் இருள் சூழ்ந்த பனி போல் பல சஞ்சலங்களால் பாதிக்கப்பட்டு பயங்கரமான நோயினுலும் கெண்டங்களும் சூழும் பங்காளிகளின் பகையும் தொழிலில் பராமரிப்பான நஷ்டங்களும் பாற்பசுக்களுக்கும் பால் பாக்கிய குறைவும் பல பொருள் சேதமும் ஓர் ஆண்தத்துவமற்ற ஆடவன் ஒருவனுல் பல கலகமும் கெடுதலான நினைவுகளைக்கண்டு அதை நம்பி பொருள்களை விரையப்படுத்துவதும் யார் உனக்காக நீதிநியாயத்தை எடுத்துக் கூறினுலும் அவர்களின் மீது கொடுமையான கோபத்தை காட்டி பகைப்பதும் எட்டாத காரியங்களில் ஏணிகொண்டு முயற்சித்து ஏமாற்றமடைதலும் உண்டாகும் இக்கவலைகள் திர 2-மாதமும் 13-நாள் போக நன்மையுண்டாகும் இது மத்திபம்.

✱

# 37. பாரிஜாதம்

பிரகாரரியைப் பார்ப்பவரே !

உனக்கு பந்துக்களின் உதவியும் பலவித செல்வாக்குகளுமில்லாமற் போனாலும் பல பேர்களின் ஆருதலைக் கொண்டுதான் உன் வாழ்க்கை மென் மேலும் செழிப்புற்றோங்குகிறது இருந்தாலும் இது வரையில் தொழிலிலும் கொடுக்கல் வாங்கலிலும் சினேகிததோஷத்திலும் வேண்டிய பொருள்களை அழித்ததுண்டு அவ்வித கவலைக்குள்ளாகும் நேரங் களிலெல்லாம் ஏனிப்படி நடந்துக்கொண்டே போ மென்று விசனித்திருக்கின்றாய் இருந்தாலும் அச்சப் படாதே உனக்கு உன்னும் 10 நாளில் ஆசுபீடத்தி லே சூரியன் அமரப்போகிறான் அதுமுதல் நல்லயோ கசாலியாக விளங்குவாய் ஆரோக்கியத்தைத்தர தேகத்தில் அணுகிய நோயானது நீங்கும் எதிரிகளின் வைப்பு சூனியமாயினும் பாதிக்காது பெரியோர் களின் பொருளினாலோ அல்லது அதிர்ஷ்ட வசமான பொருளினாலோ ஓர் தனவந்தனாக விளங்குவாய் சில நாளில் மனையில் ஓர் பெண்குழந்தை பிறக்கும் வெகு நாளைக்குமுன் கைத்தவறிய பொருளாயினும் ஓர் குறுகிய மனிதனின் உதவியால் கிடைக்கும் நீ ஒரு வருக்குக் கூறிய வாக்குதவராமல் நடந்துக்கொள் ளும் யோக்கியதாம்ச முண்டாகும் உனக்கு பலபேர் களால் நன்மதிப்பு ஏற்படும் இருந்தாலும் உன் நெஞ் சத்திலோர் எண்ணத்தை வைத்து அஞ்சவிட்டு வாடு கின்றாய் கவலைப்படாதே உனது எண்ணம் ஜெய மடைய 10 நாளிருக்கின்றது தைரியத்தை விடாதே இது உத்தமம்.

★

# 38. புன்னைமலர்

யோகதிசையிலுயர்ந்தவரே!

உனது பிறவியிலே நல்லயோகமும், சிறந்த யோனைகளும், பெருந்தன்மையும் கொடுத்திருக்கின்றான் அல்லாமலும் உனது வாழ்க்கையானது மேலுக்குவருவதற்கு பலவிதமான எண்ணங்களும், யோசனைகளும், புத்திசாலித்தனமும் உண்டு என்றாலும் எதையும் எண்ணியபடி செய்து முடிக்கும் தன்மையைப் பெற்றிருக்கின்றாய், தவிர இதுவரையில் உன் ஜீவியத்தில் கஷ்டமென்பதை இதுவரை கண்டறியாதமுறையில் சுகத்தையும், துக்கத்தையும் மாறிமாறி அனுபவித்து வருகின்றாய், தவிர உனது அதிர்ஷ்டவசத்தின் அறிகுறியாக சிலதினத்தில் வடக்குதிசையில் ஓர் லாபமும், மனையில் ஓர் திருமணகாரியமும், குடும்பவிஷயத்தில் பல கோரிக்கைகள் நிறைவேறும் தன்மையும். கொடுக்கல் வாங்கல் விவகாரங்களும், தொழில்முறையில் நல்ல ஆதாயங்களும் ஏற்படும். நோய் நீங்கும் தன்மையும், சிறந்த செல்வாக்கும் பெருகும் உன் இளகிய உள்ளத்தினால் யாருக்கும் நீ உபகாரமே செய்வாய், ஆனால் அவர்கள் உனக்கு அடுத்த நிமிஷமே அபகாரம் புரிவார்கள் இது விஷயத்தில் முக்கியமாக உன்மனதை செலுத்து, ஆனால் எண்ணியகாரியமும் ஒருவாரத்தில் ஜெயமடையும் கவலைப்படாதே இது உத்தமம்.

# 39. மல்லிகை

ஆருடப்பலனைக் கேட்பவரே!__

உன் ஆகாத கிரகங்களின் கோட்பாடுகளால் அலைச்சலும் திரிச்சலும் அபாயமான பல துன்பங்களையும் அடைந்த உனதுள்ளம் அலைமோதுகிறது யாருக்குதான் நன்மையைச் செய்தாலும் தீமை நேரிடுகிற முறையைக்கண்ட உனது நெஞ்சம் துயரமடைகின்றது அழிவு எண்ணம் கொண்ட சில பேர்களின் சதிதிட்டங்களுக் குள்ளடங்கிய உனது வாழ்க்கையானது நாளுக்குநாள் க்ஷீணப்பட்டு பீனதிசையடைகின்றது இக்கவலையே உனக்கு மன நோயாக வாய்த்து மனைவிமக்களையும் பந்துக்களையும்கண்டால் நாகம்போல் சீரச்செய்கின்றது இந்த அபலமான செய்கைகளால் மனதில் பல எண்ணம் பல யோசனைகள் திட்டமிட்டு இருந்தாலும் ஒன்றுமே பயன்படாது போகின்றதால் உன் மனது பெரிதும் நாணமடைகின்றது தவிர வீட்டைவிட்டு வெளியில் போனால் வேடிக்கை விளையாட்டு சற்று மனமும் நிம்மதியாக இருக்கும் வீட்டினுள் நுழைந்தால் வெறுப்பும் சலிப்பும் விபரீதமான கவலைகளும் வெகுவாக இருக்கும் உனது கிரகராசியைக்கண்டுநட எந்தகாரியத்திலும் அவசரப்பட்டு பிரவேசியாதே நல்லதைச் செய்தாலும் பொல்லாப்பு தொழில் நஷ்டம் மனகஷ்டம் பலவிதமான சஞ்சலங்கள் நெஞ்சத்தை புருக்கும் எதிலும் நிதானத்தைக் கைவிடாதே உன் கெட்ட கிரகங்கள் நீங்குவதற்கு இன்னும் 3-மாதமிருக்கின்றது அதுவரையில் வெகு தந்திரமாக நடந்துகொள் எதைச் செய்யவும் இச்சமயத்தில் ஈடுபடாதே தைரியமாகயிரு இது மத்திமம்.

★

# 40. மனோரஞ்சிதம்

இராசிபலனைக் கேட்பவரே !

உனக்குத் தெளிவான ஞானமும் தேர்ந்த கல்வியும் கூர்ந்த உள்ளமும் ஆழ்ந்தயோசனைகளும் அறிஞர்களின் சவகாசமும் அதிபதியாக ஓர் குடும்பத்தை ஆதரிக்கும் அமைப்பும் எதிலும் அதிகாரதத்துவங்களையும் அண்டியபேர்களுக்கு ஆதரவளிக்கும் தன்மையும் அன்பு பொருந்திய வாய்ச்சாலங்களின் திட்டவட்டங்களும் அய்யன் உனக்கு அளித்திருப்பினும் சிலசமயங்களில் உன் குடும்பத்திலுள்ள பல கோளாறுகளினால் சிலகவலைகள் மனதில் புகுந்து புண்பட்டு தெய்வத்தையும் உன் பெற்றோர்களையும் நிந்தித்து சிந்திக்கின்றாய் இருந்தாலும் ஆத்திரப்படாதே உனக்கு யோகத்தைத் தரக்கூடியகிரகங்கள் அமைப்புடன் இல்லாது போயினும் சற்றேரக்குறைய நல்ல பலனைத்தரக்கூடிய கிரகங்கள் இப்பொழுது உனதுராசிக்கு நட்புபெற்றிருப்பதால் எக்காரியத்திலும் உனக்கு அபஜெய மளிக்காது ஒருவருக்கு நீ உரைத்திருக்கும் வாக்கு உறுதியான வாக்காக முடியும் உன் மனையில் பிறந்திருக்கும் குழந்தையினால் மனதிற்கு மகிழ்ச்சியைத் தருவதல்லாமல் மனையில் பலகாரியங்களும் மனம்போல் கூடிவரும் வெகுநாளைக்குமுன் மறைந்துப்போனஓர்பொருளாயினும் ஜீவனாயினும் ஒருமங்கையின் வாய்மொழியினால் புலன் தோன்றிகிடைக்கும் இன்னும் 7 தினத்தில் எண்ணங்களெல்லாம் திண்ணமாகமுடியும் அஞ்சாதே இது உத்தமம்.

✱

# 41. மருவு

ராசிபலனைக் கேட்பவரே!

உனக்கு பலபேர்களின் உதவியும் பெரியோர்களின் பொருளும் பெற்றோர்களின் செல்வாக்கும் இருப்பதனால் நிரந்தரமான நல்ல யோகத்துடனே தான் ஜீவித்து வருகிறாய் தவிர எதிலும் நீ முன்னுக்கு வரவேண்டிய அம்சமுண்டு விட்டுப் பிரிந்த ஓர் ஜீவனோ கைவிட்டுப்போன பொருளோ தொழிலோ இம்மாதத்திற்குள் கிடைக்கும் சில நாளிற்குமுன் பல காரியங்களிலீடுபட்டு மனக்கஷ்டமும் பொருள்நஷ்டமும் அடையும் காலங்களில் உன் மனதை நீயே நொந்துகொண்டிருக்கின்றாய் கெட்ட கிரக சேஷ்டை நீங்குதற்கு இன்னும் 21 நாளிருக்கின்றது பலவிதமான தொழில் செய்ய இந்த நேரத்தில் நல்ல ஆதாயங்களும் சில தினத்தில் மனையில் ஓர் சுபகாரியமும் மனோகோல நல்ல லாபமும் விர்த்திகரமும் பலகாரியங்களில் வெற்றியுண்டாகும் சிறந்த ஆரோக்கியமும் நிறைந்த செல்வாக்கும் அதிகரிக்கும் ஆனாலும் எக்காரியத்திலும் சில அவசரபுத்தியிருக்கின்றது அது உனது பிறவியின் குணபாவமாகவே அமைந்துவிட்டது இனியாகிலும் அவ்விதமான குணத்தை விடுத்து எதையும் ஆழ்ந்து அமைதியுடன் செய் தடையில்லாமல் நல்ல லாபமும் காரியத்தில் வெற்றியும் காண்பது நிச்சயம் தவிர நாடிய எண்ணமெல்லாம் 40 நாழிகைக்குள்ளாவது அல்லது திடமாக 4 தினத்திலாவது எப்படியும் ஜெயமடையும் இது உத்தமம்

# 42. மரிக்கொழுந்து

ரோகத்தின் கோளாறைக் கேட்பவரே!

உனக்கு பொல்லாத காலம் சொல்லாமல் ஏற்பட்டு சுமார் 3 வருடகாலமாக தொல்லையும் பல்வேறு ஆபத்துகளும் பகையாளிகளின் நடுவிலே சதியான அநேக அபாயகரமான சேஷ்டைகளும் கைப்பொருள் விறையமும் வீண் சிலவு விபரீத கலகம் இதற்குமுன் சிலநாளைக்குமுன் கொடுத்திருந்தாலும் உன் ராசிக்கு கெட்ட கிரகம் மாறியபோது ஏக்கத்தையும் மனசோக்கத்தையும் கொடுத்து வந்ததுமல்லாமல் நினைக்கும் எண்ணத்தில் மனக்கிலேசம் குணபேதகமும் தன்னுடைய சொந்த பொருளையோ தொழிலையோ ஜீவனையோ பிறரபகரித்தல் அண்டையயலில் சண்டை சச்சரவு தொழில் நஷ்டமும் பங்கம் செய்யக்கூடிய பல பேர்களின் சதிதிட்டங்களும் அதன் காரணத்தால் இடம்விட்டு வேரிடம் மாறுதலும் அந்த இடத்திலும் பல அபாயங்களும் நன்மையைச் செய்யினும் அதனல் துன்மையும் தர்மத்தை நினைக்க அதர்மமும் மனையில் நாகமும் கீரியும் போல் சச்சரவும் பல எண்ணம் பலயோசனை துன்மார்க்கரின் நடுவில் துன்பங்கள் அரசபகையும் அபாண்டமான குற்றங்களும் யாரைக்கண்டாலும் உன் விஷயத்தில் அருவருப்பும் ஆகாத நோயினாலும் அபாயமான கண்டங்களாலும் பேய்பில்லி சூனிய முறையின் கூடார்டினாலும் தனவிரையமும் தாக்ஷண்யத்தால் பல தொந்தார்த்தங்களும் ஏற்பட்டிருக்கலாம் இருந்தாலும் இன்னும் 45-நாள் போக நன்மையுண்டாம் இது சத்தியம்.

*

# 43. மயில்கொண்ணை

கிரகராசியை பார்ப்பவரே!

உன் தாய் தந்தையரின் தபோ பலத்தினால் தரித்திரமென்பது இன்னதென தெரியாத முறையில் இத்தரணியில் நீ ஜீவித்து சுகத்துடன் பல கலை புணர்ந்து பந்துக்களாலும் சிநேகிதர்களாலும் உதவிகள் வேண்டியதைப் பெற்று ஒரு குறைவுமின்றி உத்தியோகத்துறையிலும் வியாபார விஷயத்திலும் மிக மேன்மையான லாபங்களை யெல்லாமடைந்து ஒருவருதவியின்றி ஜீவித்து வருகின்றாய் இதற்குமுன்பும் சுமார் 1 வருஷத்திற்கு முன்பு பல கெண்டங்களும் நோய்களும் காட்டி சற்றுபாதித்து அதனால் ஆயுளுக்கு அபாயமேற்படுமோ எனவும் நினைக்கும்படி நேர்ந்தது ஆனால் உனது நீடித்த ஆயுளின் அமைப்பினால் கெண்டங்களெல்லாம் வண்டாக பறந்தது தவிர இன்னும் 2 மாதத்தில் உனக்கு புதிதாக ஓர் பந்துக்கள் உதவி ஏற்படும் மனையில் ஆண் குழந்தை ஒன்றும் பிறக்க வேண்டியிருக்கின்றது தவிர அண்ணன் தம்பி முதலியபேர்களுக்குள் பல கொள்கைகளில் சச்சரவு ஏற்படாமல் சுக க்ஷேமமிருக்க குடும்பம் தழைத்தோங்கும் குடும்பத்தில் பிள்ளைகளுக்கு ஞானம் கல்வியானது அதிகரிப்பதுடன் சீரும் சிறப்பும் செல்வாக்கும் சில பகைவர்களின் உறவு கூட்டுறவுடன் வெளிநாட்டின் செய்தியால் வேண்டிய லாபங்களும் வீணர்களின் சேஷ்டைகள் விலகுதலும் பல எண்ணங்கள் கைகூடுதலும் செல்வாக்கின் பெருமையும் அதிகரிக்கும் அஞ்சாதே நாடிய எண்ணம் திடமாக வெற்றியாகும் இது உத்தமம்

*

# 44. மஞ்சள் ரோஜா

ஆருடம் கேட்பவரே

ஆண்டவன் நல்ல வருமானங்களையும் தனசம்பத்துகளையும் தந்திருந்தும் உன் எதிர்கால வாழ்க்கையின் நிலை எவ்விதமேற்படுமென்பதை எண்ணிப்பாராமல் பலவிதமான வீண் செலவுகளிலும் துவக்க மற்ற துஷ்டர்களின் சவகாசத்தினால் நஷ்டமான அனேக காரியங்களிலும் ஈடுபட்டு வருகின்றாய் அவ்வித கஷ்ட நஷ்டங்களேற்படும் பொழுது மாத்திரம் உனது அபலமான குணத்தை நீயே வெறுத்து கவலையடைகிறாய் அடுத்த நிமிஷமே மனது தேறி பின்னும் பல நஷ்டங்களில்தான் ஈடுபட உன் மனது உன்னைத் தூண்டும் இனி அவ்வித சமயசந்தர்ப்ப குணத்தை மாற்றிக்கொள் எதையும் ஆலோசித்து உடன்படு அதில் உறுதியான வெற்றி உன்னுடையதேயாகும் உலுர்த்தர்களின் உறவை வைக்காதே உன் பெற்றோர்களின் வாக்குக்கு எதிர்வாக்குக் கூறாதே உன்னைப்படைத்த ஆண்டவனுக்கு அஞ்சிநட எவ்வழியிலும் நன்மையுண்டாகும் இந்த வாரத்தில் உனக்கு சந்திரன் கன்னியாராசிக்கு மாறப்போகிறான் ஓர் கன்னிகையின் உதவியால் உனக்கு அதிக செல்வாக்குகளும் லாபங்களும் மனையில் சுபகாரியங்களும் பெண்குழந்தை உற்பத்தியும் உன் தொழிலும் மக்களுக்கு கல்வியும் விர்த்திகரமும் களிப்புற்று குடும்பத் தழைப்பும் கோரிய எண்ணம் ஜெயமடையும் தன்மையும் உண்டாகும் அச்சப்படாதே இது உத்தமம்

✱

# 45. மரமல்லி

கவலை கொண்டவரே!

கலங்காத உள்ளம் கறைந்து உருகின்றது கருத்துள்ள சொந்தபந்துக்களிடமும் கடும்பகை ஏற்படுகின்றது கண்ணுக்கெதிரேமனதாரகொடுத்த பொருளைக் கேட்டாலும் கபடமும் கலகமும் சதிதிட்டங்களும் ஏற்படுகிறது கலகம் புரிந்து உன் குடும்பத்தைக் கலைக்கவும் நீ காஷயமணிந்து துறவரம் போகவும் கண்ணீர்விடும்படியான கருணையற்ற துரோகமும் புரிய உன் குடும்பத்தில் கபடர்கள் கூட்டம் கர்த்திருக்கின்றனர் வெகு நாட்களாக பலவித துன்பங்களடைந்து வரும் நீ ஆழ்ந்துயோசியாமல் அநுகூலமடையமுடியாத பல காரியங்களி லீடுபட்டு மனம் கெட்டு மயங்கித் தியங்கி உனைப்படைத்த தேவனை நிந்தித்து வருந்துவது உன்கெட்ட கிரகங்களின் அமைப்பேயாகும் ஆனல் இதுவரையில் நீ யடைந்த துன்பங்களெல்லாம் இன்னும் 3 மாதத்திற்கு உன் கெட்ட காலம் பின்னும் தாண்டவ மிடப்போகின்றது அது சமயத்திலே நீ வெகுஜாக்கிரதையுடன் நடந்து கொள்வதுடன் எதையும் ஆழ்ந்தாது சிந்தித்து செய்யவேண்டும் பல குரும்பர்களின் வார்த்தையைக்கேட்டு குணபாவத்தை இழக்காதே கொடுத்த பொருளை அவசரப்பட்டு கடுமையாகக் கேட்காதே எத்தகும் பொருமையைக் கையாண்டுவா பொருமைக்குப் புகழும் நன்மையும் லாபமுமுண்டு நம்பிக்கை கொண்டு நவக்கிரகங்களை நாள்தோறும் தவராமல் கும்பிட்டுவந்தால் சிலநாளில் உனக்கு நல்லகாலம் ஏற்படும் அதனல் நஷ்டம் கஷ்டம் இதுகளெல்லாம் விலகும் இப்பொழுது கோரிய எண்ணம் தடங்கலாகும் இது சத்தியம்.

# 46. மஞ்சாம்பரம்

யோகராசியைக் கேட்பவரே!

உனக்கு இறைவனின் அருளும் இனகிய உள்ள முமம் எக்காரியத்திலும் இடைவிடா முயற்சியும் இனத்தினர்கள் மீதும் உனையீன்றோர்கள் மீதும் மனைவி மக்கள் மீதும் ஆசாபாசமும் எதற்கும் அஞ்சாத நெஞ்சமும் குடும்பத்தில் உனக்கு ஆதரவற்று இருந்தாலும் நம் எதிர்கால வாழ்க்கை எவ்விதம் நடைபெறுமோ நம் இனத்தவர்கள் மத்தியில் சற்றும் சளியாமல் நம் வாழ்க்கையானது முன்னேற்ற மடையுமோ என்று ஏக்கங்கொண்டு காலத்தையனுசரித்து யோக்கியதாம்சம் பொருந்த விளங்கி வருகிறாய் இதின் பொருட்டே வாழ்க்கைப் பாதையில் நிம்மதியற்று விளங்குகின்றாய் அஞ்சாதே அதிர்ஷ்டவசமான யோகதிசை ஏற்பட்டு ஒருவாரமாகின்றது இனி அவ்வித சந்தேகங்களை மனதில் வையாதே எதிலும் நீ வெற்றிபெறுவாய் தொழிலில் நல்லலாபமும் விர்த்திகரமும் அடையக்கூடும் உனை சிரமித்த நோய் பேரழிந்து போகும் தவிர நீ வேளியூர் பிரயாணம் போகவோ அல்லது தேவாலயத்திற்கு யாத்திரை போகவோ மன நோக்க முண்டு அது 14 நாளில் உனக்கு கூடிவரும் இருந்தாலும் வாரந்தவராமல் நீ பிறந்த கிழமையன்று உன்குலியன்றதை தருமம் செய்துவா உன்குடும்பம் தழைத்தோங்கும் மனதில் நாடிய எண்ணமும் தடையின்றி ஜெயமடையும் இது உத்தமம்.

✱

# 47. மகுடம்பூ

யோக நிலையைப்பார்ப்பவரே!

உனக்கு அதிர்ஷ்டவசமான லாபங்களையெல்லாம் தரக்கூடிய நல்லகிரகங்களெல்லாம் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பதால் ஆதிக்கமான செல்வாக்கும் அளவற்ற லாபங்களையும் அளிக்கும்அஞ்சாதே.நீமாத்திரம் மன அவதைரியத்தினால் ஆண்டவனே நான் எண்ணிய எண்ணத்தில் ஜெயமுண்டா? எனது ஏக்கங்கள் நீங்கி இல்வாழ்விலேற்பட்டிருக்கும் இடைஞ்சல்கள் நீங்குமா என்வாழ்க்கையானது என் இனத்தினர்கள் நடுவில் இன்பகரமான வாழ்க்கையாகத் துலங்குமா உனக்கு இடர்விளைவிக்கும் எதிரிகளின் கூட்டம் ஏக்கங்கொண்டு ஒழியுமா? எந்த தொழிலைச் செய்தாலும் அதனால் முன்னுக்கு வரமுடியுமா? இழிவான நோய் நீங்குமா என்று இரவும் பகலுமாக உள்ளம் குமுறுகிறாய் தவிற நீ சிலநாளைக்குமுன் பல பேர்களின் நடுவில் பலதொல்லைகளில் சிக்குண்டு கவலையும் கஷ்டமும் கைப்பொருள் விரையமும் கபடமான சதிநினைவின் மிகுதிகளும் ஏற்பட்டு அதுகளிலிருந்து தேறி தெளிந்து உலகில் இப்பொழுதுதான் நலைதூக்கிக் குடும்பத்தில் சற்றுமன நிம்மதிகொண்டு வாழ்ந்து வருகிறாய் இதற்கு முன் பட்ட துன்பங்களின் மிகுதியால் எதிலும் நம்பக மற்று ஏமாற்றமடைந்து வடுகிறாய் அவதைரியப்படுவதால் அநுகூலமேற்படாது இப்பொழுது 6 தினமாக உனக்கு அதிஷ்டயோகம் ஏற்பட்டிருப்பதால் எதிலும் உனக்கு லாபமேற்படும் தைரியமாக எதையும் செய் வெற்றியடைவாய் இது உத்தமம்.

✱

# 48. மன்மதபாணம்

கவலைகொண்டவரே!

நன்மையுள்ள குணமும் துன்மதியை யளிக்கின்றது தரித்திரம் உன் குடும்பத்திலே தாண்டவமாடுகின்றது தாய் தந்தை சுற்றத்தார் முதல் தன்னை பழிக்கவும் அதனால் தன்னிலை மாறி பல இடங்களில் திரிந்து அலைச்சல் திரிச்சலுடன் எண்ணத்தில் ஏமாற்றமும் எவ்விடத்தில் போய்நின்றாலும் நிந்தனையும் பகையும் நம்பிய இடத்தில் நயவஞ்சகமும் ஓர் நங்கையரின் உறவினால் நாலாவழியிலும் பொருள் சேதமும் தொழில் முகாந்திரத்தில் நஷ்டமும் நிந்தையும் நேரலாம் இதுவரையில் உன் வாழ்க்கையில் சில சிநேகிதர்களின் உறவினால் சீரழிந்து பல கெடுதல்களையும் சஞ்சலங்களையும் அடைந்திருக்கின்றாய் அப்படியிருந்தும் இன்னும் பல துர்நடத்தையுள்ளவர்களின் சிநேகத்தையே தொடர்ந்து நடக்கின்றாய் ஆனால் அது விஷயத்தில் உனக்கு சிலநாளில் பல ஆபத்துகள் நேரக்கூடும் ஆதலால் இனி அவ்விதமான துர்காரியங்களில் பிரவேசியாதே உன் கெட்ட கிரகங்களின் கோளாறினால் பந்துக்களை பகைத்துக்கொள்ளாதே எத்தகைய கஷ்டங்கள் ஏற்பட்டாலும் தைரியத்தை கைவிடாதே ஆண்டவனின் கருணையால் சில தினத்தில் உன் சிக்கலான வம்பு வழக்குகளும் கஷ்டங்களும் ஒழிந்து தென்புடன் வாழக்கூடும் இருந்தாலும் தற்போது தொழில் முறையில் உனக்கு சற்று கவலைகளேற்பட்டிருக்கலாம் அக்கவலையானது ஒரு பெரிய மனிதரின் உதவியால் நீங்கும் எதுவும் உனக்கு இச்சமயம் தடங்கலாகத்தானிருக்கும் இது மத்திபம்.

✱

# 49. மந்தாரை

இராசியிலுயர்ந்தவரே!

உன்னுடைய நல்லகாலத்தின் காரணத்தினால் உனது ஆயுள்பாகத்திலே அமைப்பான யோகங்களைத் தருவதற்கு உனது கிரகங்கள் எதிர்பார்க்கின்றது ஆனால் எந்தகாரியத்திலும் சில அவசரபுத்தியிருக்கின்றது இருந்தாலும் பதராதே அமைதியாக இரு எதிலும் ஜெயமடையவேண்டிய அம்சமுண்டு தவிர இச்சமயத்திலே நீயோர் ஜீவனைநாடி அதனால் நமக்கு அநுகூலமுண்டாகுமா என்றும் எண்ணமிட்டிருக்கின்றாய் நாடிய எண்ணத்திற்கு நல்ல பலனுண்டாகும் குடும்பத்தில் பல சஞ்சலங்கள் தோன்றினாலும் அது உனது யோகத்தினால் விலகும் குடும்பத்தில் யாருக்கேனும் நோய்பிணி கண்டிருந்தாலும் மருந்தினால் நீங்குமே பெரிய மனதிற்குக் கவலையைதராது குடும்பத்தில் பிள்ளைகளுக்கு ஞானம் கல்வியும்விவாக பொருத்தங்களும் பல சீர்சிறப்புகளும் இந்த வருடத்தில் நடக்கும்படியானதிசை ஏற்பட்டுள்ளது உன் குடும்பத்தில் மடிந்தவர்கள் பக்கத்திலே துணையாக இருக்கின்றார்கள் அவர்களை வெள்ளிக்கிழமைகளில் பூஜித்துவா இன்னும் உனக்கு பலவிதமான செல்வாக்குகள் பெருகும் தவிர நீ யாருக்கும் முன்பின் யோசியாமல் உதவி புரியலாம் அதனால் உனக்கே தீமையுண்டென்பதை மாத்திரம் திடமாகத்தெரிந்துகொள் அல்லாமலும் உன்மனதில் எண்ணிய எண்ணம் எதுவாயினும் இடைஞ்சலில்லாமல் ஜெயமடைவதற்கு இன்னும் 5 நாளிருக்கின்றது அவசரப்படாதே இது உத்தமம்.

# 50. முல்லைமலர்

அதிர்ஷ்டப்பலனைப் பார்ப்பவரே!

குணமோ நல்லகுணம் மனமும் பரிசுத்தமான மனம் கல்வியும் கணமானதொழிலும் கலங்காத உள்ளமும் கதியென்றடைந்தவரை யாதரிக்கும் குணங்கபடற்ற நெஞ்சமும் யாரிடமும் கனிவானவார்த்தையும் அவர்கள் களிக்கத்தக்க முறையில் நடந்துகொள்ளும் சுபாவமும் பிறருதவியின்றி தன்முயற்சியே காரணமாகக்கொண்டு எதையும் முடிக்கும் வைராக்கிய சிந்தையும் குடும்ப வாழ்க்கையும் பல குறும்புகளை வையாமல் குணமுடன் உன் பந்துக்களுடனும் மனைவிமக்களுடனும் மனது ஒருமித்து வாழ்க்கை நடத்தி அதனால் சுகதுக்கத்தை இயற்கையாக அநுபவிக்கும் முறையையும் உனக்கு ஏற்படும் பல எண்ணங்கள் உன் மனதில் பாதிக்கும்படியான சிலகிரகங்களின் கோட்பாடினால் நல்ல ராசியிலும் சற்று யோசனையாகவே நடந்துக்கொள்வதும் பல பேர்களின் சந்தேகமான புத்தியின்மையால் காரியங்களில் தவக்கப்பட்டு பிறகு பிசகான புத்தியின் தன்மைக்காக மனம் வருந்துவதும் பின்பு தன் சுயஅறிவைக்கொண்டு நீ நடந்துகொண்டு நன்மையடைவாய் உனக்கு இப்பொழுது சில நாளில் ஓர் பொருளோ அல்லது ஓர் நாற்கால் ஜீவனோ கிடைக்கவேண்டியுமிருக்கின்றது அதனால் உனக்கு அளவற்ற ஆதாயங்களெல்லாம் ஏற்படலாம் ஆனாலும் ஓர் முக்கியமான எண்ணம் உன் மனதில் தோன்றி ஜெயமடைவது நம்பகமற்று இருக்கின்றது அந்த எண்ணம் இன்னும் 7 நாளில் ஜெயமடையும் இது உத்தமம்.

★

# 51. லேடிகனகாம்பரம்

கவலையால் ராசியைப் பழிப்பவரே !

உனது ஆகாத காலத்தை அநுசரித்துப் பேசுவதற்கு இந்த ஏடு இடந்தராது என்றாலும் நீ பல இடைஞ்சல்களில் சிக்குண்டு வாழ்க்கைப் பாதையே மாறுபட்டு குணமும் வேறுபட்டு உலைவாய் மெழுகு போல் உருகுகின்றாய் தவிர சுமார் 1½ வருடமாக உனக்கு ஏற்பட்டுள்ள கவலைகளை நினைக்க நெஞ்சம் திடுக்கிடுகின்ற தென்றால் படிக்கவும் நாவெழவில்லை அல்லாமலும் குடும்பத்திலும்கஷ்டம்கொடிய சிநேகிதர்களால் பொல்லாப்பு தனக்குஞ்சா பாம்பு போன்ற பிள்ளைகளின் கவலை கைப்பொருள் விரையமும் தொழில் நஷ்டம் குடும்பப்பகையின் மிகுதியால் இடம் விட்டு வேறிடம் மாறவும் பல கெடுதல்களும் நிந்தையுமேற்பட்டு நிரபராதியான நிலையும் சிலநாளைக்கு முன் ஏற்பட இருந்தது ஆனால் அது ஒரு பெருதவியால் தடைபட்டு குணத்தை மாற்றி மனதைத்தேற்றி மறுபடியும் இல்லறத்திலீடு படுத்தியிருக்கலாம் நோயின்கவலையால் மனம் நோகவும் செய்திருக்கலாம் கடன்காரர்கள் தொல்லையும் காட்டியிருக்கலாம் அது உனது நாணயத்தின் தன்மையால் அக்கவலை அதிகரித்திருக்காது தவிர இப்பொழுது உன் மனசஞ்சலமோ மதியைக் குலைத்து பதிவிட்டு மாற்றி பரதேசம் போகவும் சில கிரகங்களின் அமைப்புண்டு ஆனால் புத்தியை சிதறவிடாதே கண்கலங்கும் கவலையாயினும் காயத்தை மறிக்க ஆண்டவனின் கட்டளையில்லை ஆகாதகாரியங்களிலீடுபட்டு அலைவோதுவதில் அநுகூலமேற்படாது 40 நாள்போன பிறகு நன்மை யுண்டாகும் இது சத்தியம்.

★

# 52. வளைஞ்சாம்பரம்

யோகத்திலுயர்ந்தவரே!

கஷ்டதிசையான குடும்பம் கவலையான செல்வாக்கு காலமும் சஞ்சல மிகுதியால் சலிப்புள்ள வாழ்க்கை நடத்துகின்றார் உனது பெற்றோர்கள் அப்படியிருந்தும் நத்தையின் வயிற்றில் முத்து ஜெனித்ததுபோல் நீ ஜெனித்து ஐந்துவயது முதற்கொண்டு கவலைத்தெளிந்து கஷ்ட ஜீவியத்தை விடுத்து சற்று ஏறக்குறைய நாலுபேர் மதிப்புக்கு மனிதனை தோன்றி இப்பொழுது உன்னுடைய யோகதிசையின் காரணத்தினால் யாருக்கும் உதவி செய்யவும் அவர்களால் உனக்கு நற்கியாதி ஏற்படவும் பலதொழில் செய்து பயன் பெறும் லாபங்களையடையவும் குடும்பவாழ்கையிலீடுபட்டு குறைவின்றி கொடுமையென்பதை யடையாமல் உன் வாழ்க்கைப் பாதையில் ஒழுங்கான முறையில் நடந்து வரவும் எந்தவிதமான கவலைகளும் இக்கட்டுகளுமின்றி நன்மையாகவே நடந்தேறும் சில நாளைக்கு ஏதேனும் ஒரு வாக்குறுதி செய்திருக்கலாம் அந்த வாக்கு இச்சமயத்தில் உறுதியாகவேண்டிய அம்சமுண்டு ஆபத்தான கண்டங்களாயினும் உன் ஆயுளை அழிக்காது சற்று கவலை காட்டி மாயமாய் மறைந்துப்போகும் குடும்பத்தில் பிள்ளைகளுக்கு பலவிதமான தோஷங்களும் காட்டலாம் அது அவர்களின் அமைப்புபோல் நிவர்த்தியாகும் தவிர உன் வாழ்க்கையில் கொண்டயிடத்தில் பலவித சிக்கல்களெல்லா மிருக்கலாம் அதற்காக கவலைப்படாதே சிக்கல்களும் பிக்குகளும் எக்குறையுமின்றி விலகுவதுடன் நாடிய காரியமும் நல்ல விதமாக வெற்றியடையும் இது உத்தமம்.

✱

# 53. வாடாமல்லி

யோகநிலையை பார்ப்பவரே!

யோகத்திலும் உனக்கு ராஜயோகம் உனது ராசியின் பலன் நடந்து வருவதை கூற கேட்பவர் திகைப்பார் அத்தகைய யோகாதிகாராகிய உனக்கு எதிலும் சற்று தயக்கமுண்டு இதற்கு உனது சந்தேகம்வாய்ந்த மனமே காரணமாகும் ஆண்டவன் உனக்கு திட்டமான பெருந்தன்மையும் மட்டிலாத செல்வமும் கட்டுக்கடங்கிய நேர்மையும் நிதானமும் சட்டவிரோதமில்லாத குணபாவமும் கொடுத்திருக்கின்றான் இதிலும் சிலசமயங்களில் பலபேர்களின் உறவை நட்புகொண்டு பல கஷ்டநஷ்டங்களையெல்லாம் அடைந்ததுண்டு அந்தக் கவலையான சந்தேகமானது நல்ல சந்தர்ப்பங்களிலெல்லாம் உனை லாபத்திலீடுபட வொட்டாமல் தடுத்து வருகிறது அஞ்சாதே உனக்கு 15 நாட்களுக்கு முன்னமேயே சுபகிரகங்களெல்லாம் நட்புகொண்டு ஆகாரிபீடத்தில் அமர்ந்திருக்கின்றது இனி எதுக்கும் கவலைப்படாதே ஏக்கமான தியக்கத்தினல் ஏமாற்றமடையாதே எந்த காரியத்திலும் உனக்கு வெற்றிகரமுண்டு ஒருவரின் தாக்ஷண்யமில்லாமல் எதையும் செய்யலாம் எதிலும் லாபமடைவாய் மனையில் பல நல்ல காரியங்களெல்லாம் இந்த வருஷத்தில் நடக்க வேண்டியிருக்கின்றது சில நாளைக்குப் பிறகு மனையில் ஓர் அதிர்ஷ்டவசமான பொருளும் கிடைக்கும் எந்த காரியமாயினும் உனக்கு இனி தடையின்றி ஜயமடையும் இது உத்தமம்

✱

# 54. வெண்சாமந்தி

கவலையால் மெலிந்தவரே!

உன்னை ஆண்டவன் பலவழியிலும் சோதனை செய்து வருகிறான் அதற்கெல்லாம் நீ அஞ்சாமல் எவ்வளவோ கஷ்டங்களை யெல்லாம் சமாளித்து வருகிறாய் இருந்தாலும் உன் மனசஞ்சலத்தைச் சொல்லவும் படிக்கவும் இந்த ஏடு இடந்தராது என்றாலும் நீ இப்பொழுது நமது கவலை தெளியவில்லையே வறுமை நீங்க வழியில்லையே உள்ளத்தில் உதித்த எண்ணம் ஈடேறுவதற்கு மார்க்கமில்லையே என காலக்கமுற்றிருக்கின்றாய் கவலைப்படாதே கலங்கச் செய்யும் துன்பமாக இருந்தாலும் விலகுவதற்கு ஒரு நேரமுண்டு அந்த நேரம் அதிக தாமதத்திலில்லை மிகசீக்கிரத்திலேயே இருக்கிறது இப்பவோ இன்னும் சற்று நேரத்திலேயோ நீ ஈடேறும் மார்க்கத்தை எதிர்பார்க்கின்றது இதற்கு முன்னும் பல பேர்களுக்கு பல வழியிலும் சகாயம்செய்து மோசம்போயிருக்கிறாய் இப்பொழுதும் ஒருவருக்குதவி புரிய உனது உள்ளம் நாடுகின்றது ஆத்திரப்படாதே எதையும் ஆலோசித்துச்செய் தவிர மனதும் ஒரு எண்ணத்தை நம்பியிருக்கின்றது கவலைப்படாதே உன் எண்ணம் ஈடேற மனது சாந்தியடைய இன்னும் 12-நாளில் சந்தர்ப்பமேற்படும் திடங்கொண்டு இரு மனையில் ஒரு கன்னிகை மடிந்திருக்கின்றது அந்த கன்னிகையை மனதார வாரத்திற்கொரு நாள் வெள்ளிக்கிழமைகளில் பூஜித்துவா நாளுக்கு நாள் உன்மனது பூரிப்படையும். இப்பொழுது நாடிய எண்ணம் சற்று தாமதமாகவே இருக்கும் இது மத்திமம்.

✱

# 55. வெண்தாமரை

ராசியை பார்ப்பவரே!

கடவுளின் கருணையால் களிப்புறும் செல்வாக்கும் கபடமற்ற உள்ளமும் கனம் பொருந்திய புத்திமான்களின் சிநேகமும் கருத்தில் ஒவ்வொரு எண்ணங்களையும் ஆழ்ந்து யோசித்து அதைத் திறமுடன் முடிக்கும் தன்மையும் அபயமென்ற வரை யாதரிக்கும் குணமும் அநுபவமாக எதையும் செய்து முடிக்கும் ஆர்வமும் அமைந்துள்ளது உன் அதிர்ஷ்டவசத்தின் அமைப்பேயாகும் அதிலும் உனைக் கெடுக்கவும் உன் குடும்பத்தைக் கலைக்கவும் சில யோக்கியதையற்ற போக்கிரிகளின் கூட்டம் நோக்கங்கொண்டு பல இடைஞ்சல்களை விளைவிக்க திட்டமிட்டு வருகின்றனர் இருந்தாலும் அது விஷயத்தில் கவலையடையாதே அந்த வாதிகளின் கூட்டத்தின் அநீதியான எண்ணம் உனை பாதிக்காது உன் கள்ளங்கபடமற்ற நெஞ்சத்தின் கருணையால் பலபேர்களை நம்பி மோசம் போயிருக்கின்றாய் அல்லாமலும் இப்பொழுதும் ஒருவருக்கு உதவிபுரிய உன்மனம்நாடி அதற்கு பல யோசனைகளை செய்து வருகிறது யோசனைசெய்வதில் பயனில்லை பின்னால் அது விஷயத்தில் மோசமடையக் கூடும் ஆழ்ந்து யோசித்து நடந்துகொள் உன்மனையில் கர்பந்தரித்த ஓர் மங்கையுண்டு அம்மங்கையின் வயிற்றில் சில தினத்தில் ஆயுள் நிறைந்த ஆண் குழந்தை பிறக்கும் தவிர எண்ணிய எண்ணமும் இன்னும் 6-தினத்தில் அநுகூலமாகும் இது உத்தமம்.

# 56. வெட்டிவேர்

அதிர்ஷ்டவசமுள்ளவரே!

உனக்கு ஆழ்ந்தயோசனையும் தேர்ந்தகல்வியும் தெளிந்த புத்தியும் பெருந்தன்மையும் நிறைந்த ஆயுளையும் களிப்புள்ள செல்வாக்கும் நலிவற்ற வாழ்க்கையும் குறைவற்ற தனசம்பத்தும் குறித்த காலத்தில் எதையும் முடிக்கும் வைராக்யமும் கோப மற்ற குணமும் தாழ்மையுள்ள மனமும் தானதர்ம மும் தெய்வபக்தியும் செழிப்புற்று விளங்கும் தெய் வத்தன்மையும் யாருக்கும் அளித்த வாக்கு பொய் யாத உறுதியும் அபயமென்றவர்களுக்கு ஆறுதல ளித்து ஆதரிக்கும் தயைதாகூஷண்யமும் உன் பிறவி யின் சுபாவமாகவே ஆண்டவன் அளித்திருக்கின்றான் ஆனாலும் உன் குணத்திற்கும் குறைவற்ற செலவாக் கிற்கும் தகுந்த முறைமை உன் குடும்பத்திலில்லாத காரணத்தால் உனக்கு சிந்தனையடையும் தன்மைக் குத்தான் வருந்தவேண்டியிருக்கின்றது இருந்தாலும் நல்ல அதிர்ஷ்டவசமான ராசிப்பலன் அமைந்திருப் பதால் உனது ஆயுள்காலம் முடியும் வரையில் ஆதிக் கமான செல்வாக்கு உண்டு சில நாளில் உனக்கு சொந்தமான ஓர் மனையோ வாகனுதிகளோ கிடைக்க வேண்டும் ஆனல் குபேந்திரன் போன்ற வாழ்க்கையுண்டாகும் ஆனல் ஆண்டவனை மாத்தி ரம் அனுதினமும் மறவாமல் துதிசெய்து வந்தால் அண்டவன் நல்ல பலனைத்தரக்கூடும் ஒன்றுக்கும் அஞ்சாதே இது உத்தமம்.

✱

# 57. வெள்ளை ரோஜா

ஆருடம் கேட்பவரே!

இப்பொழுது சில கிரகங்களின் கோளாறினால் குடும்ப வாழ்க்கையில் உனது வளமை நீங்கி வறுமையால் வாடுகின்றாய் அதின் கோசார நிலையினால் இடம்விட்டு வேறிடம் போகலாமா என்றும் கூட உன் உள்ளம் எண்ணமிடலாம் அப்படி இடம்விட்டு வேறிடம் போனாலும் உன் கவலையும் கஷ்டமும் நீங்காது இருக்குமிடத்திலும் ஒரு சுகமுமிருக்காது உண்மையை உரைத்தாலும் உறுதி ஏற்படாது பந்துக்களும் மனைவிமக்களும் உன் வார்த்தைக்கு அடங்காது நன்மையை செய்தாலும் நன்றி ஏற்படாது குடும்ப வாழ்க்கையிலும் கொஞ்சமேனும் உனக்கு மன நிம்மதி இருக்காது குடும்ப சச்சரவுகளும் உனை விடாது உள்ளத்தில் உதித்திருக்கும் எண்ணம் ஈடேறாது நோயின் கவலையாயினும் கூட 5 வாரம் வரையில் அதுநீங்காது உற்றார் உறவினரும் மற்றும் சினேகிதரும் உன்மீது கொண்டுள்ள பகைதீராது உன் வார்த்தை பிறருக்கு விஷப்பாம்பின் சீறல்போல் தெரியும் உன்னுடைய பொருளையே உண்டு களித்து உனக்கே துரோகம் செய்வதுடன் நிந்தையும் நிஷ்டூரமும் செய்வார்கள் வரவுக்கு மிஞ்சின செலவினால் வியாபாரமும் ஓங்காது இந்த கவலைகளனைத்தும் தீருவதற்கு 45 நாள் போகவேண்டும் இதுவரையில் புத்தியை சிதறவிடாதே தைரியமாக இரு இது பக்ஷி பம்.

# 58. ரோஜா மலர்

ராசிபலனை கேட்கும் நண்பரே!

உனது ராசியின் கிரகங்கள் நட்புகொண்டிருப்பதாலும் உன் குடும்பத்தின் பல கோளாறுகளை நினைத்தும் மாளாத கவலைகளைக்கொண்டு மனஞ்சலித்து ஆண்டவனைக் குறித்து வருந்துகின்றாய், ஆத்திரப்படாதே உனக்கு ஐயனின் கருணை இருந்தாலும் கொஞ்சம் அவசரபுத்திகளைக் கையாண்டு வருகிறாய், பதறாதகாரியம் சிதறாது என்பதை மனதில் நினையாமலேயே பலவிதத்திலும் ஆத்திரப்பட்டு மனஆறுதலை விடுத்து முன்கோபத்தினால் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் அடைந்துவருகிறாய். உறுதியுடன் உள்ளத்தை வேறுவழியில் செலுத்தாமல் ஒவ்வொரு காரியங்களையும் செய்துவா ஒரு குறைவுமின்றி உனக்கு வெற்றி கிடைக்கும். ஆனால் பல சூழ்ச்சியான வஞ்சகர்களின் எண்ணங்களில் சிக்குண்டு இருக்கின்றாய் அதனால் உனக்கு பல இடைஞ்சல்களேற்படலாம் அந்த சூழ்ச்சியாளர்களின் வலையிலிருந்து தந்திரமாக விலகிக்கொள், இருந்தாலும் உனக்கு தாயாதிகளின் பொருளாலேயோ அல்லது ஓர் கூட்டுத்தொழில் முறையாலேயோ சில சச்சரவுகள் ஏற்படலாம். அதற்கெல்லாம் பின்வாங்காதே ஜெயம் உன்னுடையதே, உறுதியாக எதையும் செய் உன் நல்லராசியின் பலன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமாக நல்ல பலனைத்தந்து உன்னை மேன்மைக்கு கொண்டுவரும் இன்னும் மூன்றுநாளில் நீ எதை நினைக்கினும் ஜெயமாகும் இது உத்தமம்.

# 59. ஜாதிமல்லி

ராசிபலனை கேட்பவரே!

உனக்கு பெரியோர்களின் பொருளோ பெற்றோர்களின் செல்வாக்கோ இல்லாமற்போனாலும் உன்வாழ்க்கையில் நிரந்தரமான நல்லயோகத்துடனேதான் ஜீவித்துவருகிறாய் எந்தஇடம் போனாலும் உன் கபடமற்ற நெஞ்சத்தின் கருணையினால் பலபேர்களின் உதவியும் தொழிலில் அநுகூலங்களும் நினைத்த எண்ணங்களுக்கு மறுப்பு இல்லாமையும் ஒன்றின்பின் ஒன்றாக ஜெயமடையும் மேன்மை நிகழ்ந்துவருகிறது இதற்கு முன்னே முன் பின் யோசியாமல் பல காரியங்களிலீடுபட்டு பொருள் நஷ்டமும் மனக்கஷ்டமும் அடையும் காலங்களிலெல்லாம் ஏனிப்படி நடந்து கொண்டோமென்றும் மனதிற் குள்ளேயே வதனையடைந்து யிருக்கின்றாய் இருந்தாலும் இனிமேல் அவ்விதமான அவசரபுத்திகளை விட்டுவிட்டு மனதை சாந்திப்படுத்திக்கொள் தவிர நம்பியிருக்கும் ஓர் ஜீவனால் நல்ல உதவிகளெல்லாம் அடைக்கூடும் இப்பொழுது உன்மனதிற்குள் ஓர் எண்ணமானது குடிகொண்டு பலவழியிலும் உனது உள்ளம் அலைமோதுகிறது கவலையடைந்த உள்ளம் சந்தோஷமடைய இந்த வாரம்போக வேண்டும் அதன் பிறகு உன்ராசிக்கு சந்திரன் ஆசிபீடத்தில் அமரப்போகிறான் எதிலும் நல்ல ஆதாயங்களும் எண்ணிய எண்ணங்கள் ஜெயமடைதலும் மகா இன்பகரமான வாழ்க்கையும் உண்டாகும் இது உத்தமம்.

✱

# 60. டிசம்பர் புஷ்பம்

ஆரூடம் கேட்பவரே!

உனது இராசி சில சமயங்களில் லாபத்தை தந்தாலும் கவலைகள் மாத்திரம் இரவும் பகலுமாக பாதித்துதான் வருகிறது கவலைதான் கண்ணீர்விடச் செய்கிறதென்றாலும் தொழிலிலும் மேன்மை யடைந்தபாடில்லை வரவுக்கு மிஞ்சின சிலவு கடன் காரர் தொல்லை கடூரமான கஷ்டம் கஷ்டத்தின் மிகுதியால் பல எண்ணம் பலயோசனை மனதில் மாறிமாறி திட்டம்போட்டு அந்த எண்ணங்கள் உருப்படாத காரணத்தால் பாம்பின்வாய் தேரைபோல் பதறி உன் இல்வாழ்க்கை நல்வாழ்க்கையற்று நிலவற்ற உலகம் போல் உன் குடும்பம் இருள் சூழ்ந்து நிம்மதியற்று வாழ்நாளை பாழ்படுத்திவருகின்றாய் இதைநினைத்தும் சில சமயங்களில் எனைபடைத்த ஆண்டவனே என் வாழ்க்கையில் எப்பொழுது நிம்மதி ஏற்படும் எந்த காலத்தில் என் இனத்தார்களின் நடுவில் மேன்மை பெற்று வாழமுடியும் என்றும் வருந்துகிறாய் கவலைப் படாதே நீ இருக்கு மிடத்திலும் பல இடைஞ்சல்களேற்பட்டு வருவதுமல்லாமல் சில பொறாமைக் காரர்களால் பலதொந்தரவுகள் நேரக்கூடும் இந்த நிர்ப்பந்தமான வாழ்க்கையிலே உனக்கு சில ஆபத்துகளும் நோயின் கவலைகளும் ஏற்படலாம் ஆனாலும் உனக்கு ஆயுள் ரேகையின் அமைப்பு உறுதியாக இருப்பதால் ஆயுளையழிக்க அதிகாரமில்லை இருந்தாலும் அடுத்த மாதத்திலிருந்து எந்த காரியத்தையும் எதிர்பார்க்கலாம் இப்பொழுது எதிலும் அவசரப்பட்டு பிரவேசியாதே அவசரப்பட்டால் காரியத்தில் ஏமாற்றமடைவாய் இது மத்திபம்.

சாயிபாபா புஷ்ப ஆரூடம் முற்றுற்று.

மெய்கண்டான் அச்சகம் கொழும்பு.

உ.க. செல்லையன்
"பொழுந்து"
அம்மன் றோட்டு
அல்வாய்

சைவசமயிகள் யாவரும் சமய உண்மைகளை விபரமாகவும் தகுந்த ஆதாரங்களுடனும், அறிவதற்கு உரிய நூல் இதுவரை வெளிவரவில்லை என்பது யாவரும் அறிந்ததே. இக் குறையை நீக்குவதற்காக பலவருடங்களாக, ஆகம, வடமொழி, தமிழ் நூல்களையும் ஆராய்ந்து இலங்கைப் பல்கலைக் கழக

…ளர்

**கலாநிதி கா … ாதக்குருக்கள்**

அவர்கள் … பெற்ற

# சைவத் … கோவிற் கிரியைநெறி

என்னும் நூல் சகல தெய்வங்களின் உற்பவமும் இலங்கையிலும், தென்பாரதத்திலும் விளங்கும் சைவத்திருக் கோவில்களில் நிகழும் தினசரி பூசைகள் யாவை? கோவில் கும்பாபிஷேகம், அபிஷேகம், பூசை ஆகியவை நடைபெறும்போது நடாத்தப்பெறும் கிரியைகள் யாவை? கொடி மரம், தேர், ஆகியவை எவ்வாறு அமைதல் வேண்டும்? விசேஷ தினங்களிலும், உற்சவ காலங்களிலும் எம்முறையில் கோவிலில் பூசை முறைகள் நடைபெறுமென்பன போன்ற சமய உண்மைகளை விரிவாக எழுதியுள்ளார் பல அழகிய படங்களுடன் கூடிய இந்நூல் சைவப் பெருமக்கள் யாவரும் வாங்கிப் படித்து சமயஉண்மைகளை அறியுமாறு மலிவுப்பதிப்பாக வெளிவந்துள்ளது.

தபாற் செலவுடன் விலை ரூபா. 5.75

**சரஸ்வதி புத்தகசாலை,**

175, செட்டியார் தெரு, கொழும்பு.

மெய்கண்டான், பிரெஸ், 161, செட்டியார் தெரு, கொழும்பு-11.